Registered as a news paper யாழ்ப்பாணம்
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 11 (22.03.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:174

# கருணாவின் சகாக்கள் தங்கியிருந்த முகாம் பகுதியில் துப்பாக்கிச் சண்டை!

## இருவர் பலி; மங்களம் மாஸ்டர் உட்பட மூவர் படுகாயம்

(பொலனறுவ)

வெலிக்கந்த பகுதியில், கருணாவின் சகாக்கள் முகாமிட்டிருந்த தீவுச்சேனைப் பகுதியில், நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் கருணாவின் முக்கிய சகாவான மங்களம் மாஸ்டர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த தீவுச்சேனைப் பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

தீவுச்சேனைப் பிரதேசத்தில் நேற்றுக்காலை 6.30 மணிமுதல் சுமார் ஒரு மணி நேரமாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் - நேற்றுக்காலை 9 மணியளவில் காயமுற்ற நால்வரை பொலனறுவ வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இவர்களில் கருணாவின் முக்கிய சகாவும் - தீவுச்சேனையில் அமைக்கப்பட்டுள்ள ஆயுதக் குழுவின் முகாம் பொறுப்பாளருமான மங்களம் மாஸ்டர் மற்றும் அவரது சகாக்கள் மூவரும் 5 வயதுச் சிறுமியொருவரும் அடங்கியிருந்தனர்.

காயமுற்ற மூவரும் பொலனறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேநேரம், ஆபத்தான நிலையிலிருந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதல் குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்த தாக்குதல்களால் போர்நிறுத்தத்துக்கு ஆபத்து!

### கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டுதசாப்தகாலமாக தொடர்ந்த உள்நாட்டுப் போர் - தற்போது ஓய்வடைந்த நிலையில் - வெலிக்கந்த பகுதியில் இடம்பெற்று வரும் சம்பவங்கள், போர்நிறுத்தத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

வெலிக்கந்த பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக கொழும்பிலுள்ள இணையத்தளம் ஒன்றுக்கு கண்காணிப்புக்குழுவின் பெண் பேச்சாளர் ஹெலன் ஒலாப்ஸ் ரொட்டிர் தெரிவித்ததாவது -

இந்தச் சம்பவமானது நிச்சயமாகவே அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவப் போவதில்லை. அத்துடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கான உடன்படிக்கையையும் தாமதப்படுத்தும்.

இந்த வன்செயல்களானது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான உறவுகளை முன்னேற்றமடையச் செய்யமாட்டாதென நாம் ஆணித்தரமாகக் கூறுகிறோம் எனத் தெரிவித்தார்.

### விண்ணாணம் விநாசியர்



இங்க வாங்கினது காணாதெண்டு கெயிட்டியையும் போய் வாங்கினம் பாருங்கோ...

## ஐரோப்பா செல்ல முற்பட்ட 14 இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

கமரூன் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லமுயன்ற 14 இளைஞர்கள் - கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்.

போலிக் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி ஆபிரிக்க நாடான கமரூனுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இவர்களை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றத்தடுப்புப் பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

விமான நிலையத்தில் சோதனை நடவடிக்கைகளை நிறைவுசெய்து கொண்டுசென்ற பின்னர் இவர்களைப் பற்றிச் சந்தேகித்த அதிகாரிகள் - இவர்களிடம் விசாரணை மேற்கொண்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரகம்வில காட்டில் இரு சடலங்கள் மீட்பு!

(பொலனறுவ)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள அரகம்வில காட்டுப் பகுதியில் கொலை செய்யப்பட்ட இருவரின் சடலங்களைப் பொலிஸார் நேற்று நண்பகல் கண்டெடுத்தாகத் தெரியவருகிறது.

பொலனறுவ - மட்டக்களப்பு சந்தியில் சந்தேகத்திற்கிடமான வானொன்றில் இருந்தவர்களை பொலிஸார் விசாரணை செய்தபோது கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் இந்தச் சடலங்களை மீட்டுள்ளனர்.

இந்த வானிலிருந்து துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


## இலங்கை இராணுவ கோப்ரல் ஹெயிட்டி மோதலில் உயிரிழப்பு!



ஐ.நா. அமைதிப்படையில் இணைந்து ஹெயிட்டியில் பணியாற்றி வந்த இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் - அங்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டார். இலங்கைப் படையினர் ஐ.நா.வின் அமைதிப் படையினராக இணைந்து வெளிநாட்டில் பணியாற்ற ஆரம்பித்த பின்னர் ஏற்பட்ட முதலாவது உயிரிழப்புச் சம்பவம் இதுவாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் நடைபெற்ற முரளிதரனின் திருமணம்!



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் (வயது 33) சென்னை மலர் மருத்துவமனையின் இயக்குனர் மதிமலர் (வயது 24) இருவரும் நேற்று திருமண பந்தத்தில் இணைந்துகொண்டனர்.

சென்னை எழும்பூரிலுள்ள ராணி மெய்யம்மை மண்டபத்தில் வைதீக முறைப்படி நடந்த திருமண நிகழ்வில் காலை 10.15 மணிக்கு மணமகளின் கழுத்தில் முரளிதரன் தாலி கட்டினார்.

இவர்களது திருமண நிகழ்வில் இலங்கையிலிருந்து நீதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, சபாநாயகர் லொக்கு பண்டார மற்றும் அமைச்சர்கள், மலையக மக்கள் முன்னணி தலைவர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சனத் ஜெயசூரிய உட்பட கிரிக்கெட் வீரர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

தமிழக கிரிக்கெட் வீரர்களான ரொபின் சிங், ஹேமங் பதானி மற்றும் இலங்கை அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரும் -தற்போது பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளருமான வட்மோர் மற்றும் நடிகர்கள் பிரபு, பாக்கியராஜ், விஜயகுமார், பாண்டியராஜன் உட்பட்டோரும் - நடிகைகளில் ரோஜா, சீதா, தனுஷின் மனைவி ஐஸ்வர்யா உட்பட திரைப்பட தயாரிப்பாளர்கள், தியேட்டர் உரிமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

## சுனாமி அனர்த்த கருத்தரங்கும் விபரண நூல் அறிமுகமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை நடத்தும் சுனாமி அனர்த்த கருத்தரங்கும், சுனாமி அறிவியல்சார் விபரண நூல் அறிமுக நிகழ்வும் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பொதுநூல் நிலைய கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் - யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் சுனாமி அனர்த்தம் குறித்தும், யாழ். பல்கலைக்கழக அரசியற்துறை விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம் சுனாமி அரசியல் குறித்தும், யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பசுபதி சிவநாதன் சுனாமி நிவாரணம் குறித்தும், கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் எஸ். மௌனகுரு சுனாமியும் நானும் என்ற தலைப்பிலும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய சுனாமி அறிவியல் சார் விபரண நூலும் அறிமுகம் செய்யப்படும்.

சுனாமியின் பின்னர் சமூகம் எனும் தலைப்பில் கலந்துரையாடலும் இடம்பெறும்.

## மெய்வல்லுனர் போட்டி

கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ. அருணாச்சலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சறோஜினி வேதநாயகம் கலந்து கொள்வார். (82)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

மோட்டர் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாய்ச் சந்திக்கும் கைதடிக்குமிடையில் இடம்பெற்ற இந்த விபத்தில் நாவற்குழியைச் சேர்ந்த சிவராசா ரூபன் வயது (22) சர்வநந்தம் உதய சூரியன் (வயது 20) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

சம்பவதினம் மூவர் யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழியை நோக்கி பயணித்தவேளை மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் மின் கம்பத்துடன் மோதியதில் இருவர் படுகாயமடைந்தபோதும் ஒருவர் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாகத் தப்பினார்.

## தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

### நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பவியலும்.

வி. கேதீஸ்வரன் (அக்கரைப்பற்று), வி. குகாநந் (காரைதீவு), தி. கதிர்காமத்தம்பி (தெல்லிப்பளை), ஆர். தயாளினி (பருத்தித்துறை), ஜி. கௌரிகிருஷ்ணா (பருத்தித்துறை), கே. திவ்வியா (யாழ்ப்பாணம்), எம். பாமினி (புலோலி தெற்கு), எம். மோகனா (வல்வெட்டித்துறை), கே. கஜேந்திரன் (யாழ்ப்பாணம்), கே. கந்தையா (சாவகச்சேரி), தி. தயாளினி (வட்டுக்கோட்டை), என். றஜநாதன் (ஸ்கந்தபுரம்), ஏ.பி. தயாபரன் (மன்னார்), எஸ். தனுஷா (தெல்லிப்பளை), எஸ். அஜிதினி (முள்ளியவளை), எம்.என்.எஸ். பிரான்சினா (திருகோணமலை), இ. பசில் (கிண்ணியா), உமாசங்கர் (திருகோணமலை), ஜி. பிரபாகரன் (கோவில் புதுக்குளம்), எஸ். விமலன் (வவுனியா).


## ஐக்கிய அபிவிருத்தி சங்கம்
## ALLIANCE DEVELOPMENT TRUST

### பணிநிலை வெற்றிடம்

மேற்படி நிறுவனமானது வடமராட்சிப் பகுதியில் இயந்திரப்படகு தயாரிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளபடியால், இவ்வேலைத்திட்டத்தில் இணைந்து வேலைசெய்ய விரும்பும் இருபாலாரும் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப்பெற்றுப் பெற்று 28.03.2005 க்கு முன் சமர்ப்பிக்கவும். வாலிபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(15 பேருக்கு மாத்திரம் வெற்றிடம் உண்டு)

☑ சுனாமியால் பாதிக்கப்பட்ட வாலிபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**காரியாலய முகவரி**
44/1 Old Park Road
Chundikulli, Jaffna.

(1102)


## உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாக சுனாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறை யாழ். மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்றுமாலை 3.30மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வலிகாமம் திருமகள் அணியை எதிர்த்து வதிரி பொமேர்ஸ் அணியும் மாலை 4.30 மணிக்கு நடை பெறும் போட்டியில் வலிகாம லீக் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து யாழ் லீக் யூனியன் அணியும் மோதவுள்ளன.

## வாள் வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8.00 மணிக்கு சுன்னாகத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சபாபதிப்பிள்ளை ஒழுங்கை சுன்னாகத்தைச் சேர்ந்த மீ. தேவராசா (வயது 33) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

சம்பவதினம் காலை இருசாராருக்கிடையே வாய்த்தர்க்கம் இடம் பெற்றதாகவும் இந்த வாய்த்தர்க்கம் முற்றி மோதலாக மாறியதால் வாள் வெட் டுக்கு இலக்காகிய மேற்படி நபர் படுகாய முற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெற்றுவரு கிறார்.

## வாசகர் நோக்கு

### பயிற்சி சான்றிதழ்களை இழந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் அவலம்

வினைத்திறனற்ற இலங்கை அரச நிர்வாக இயந்திரத்தின் இயக்கம் காரணமாக அவசர நிவாரணப் பணிகள் கூட உடனடியாக மக்களை எட்டமுடியாத நிலை காணப்படுகின்றமை இன்று உலகறிந்த விடயம். இந்த நிர்வாக இயந்திரத்தின் அக்கறையற்ற போக்கினால் பல மனித உரிமை மீறப்படும் நிகழ்வுகள் பலரும் அறியாத விடயம்.

இதே அரச சேவையில் தம்மை அர்ப்பணித்துச் சேவை செய்து இன்று தள்ளாத வயதில் ஓய்வூதியம் பெறும் ஒரு தொகுதி ஓய்வூதியர்களின் பரிதாப நிலையை இந்தப் பகுதியினூடாக எடுத்துக் கூறுவதன் ஊடாகவேனும் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த விடயத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அண்மையில் ஓய்வூதியர்களுக்கு நீண்ட காலத்தின் பின்னர் ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு இவ் ஓய்வூதிய மாற்றத்திற்கு அவர்களது பயிற்சிச் சான்றிதழ் கோரப்பட்டது. ஆனால் 50 வருடங்களுக்கு முன் பெற்ற சான்றிதழ்களை பல வயோதிப ஆசிரியர்கள் பல இன்னல்களின் போது இழந்துவிட்டார்கள். இந்த நிலையில் பிரதேச செயலகங்களை இவர்கள் அணுகிய போது அவர்கள் சேவை செய்த திணைக்களங்களில் அவற்றின் பிரதிகளை பெற்றுத் தருமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் யாழ் கல்வித் திணைக்களத்திற்குச் சென்று சிரமத்தின் மத்தியில் தேடியபோதும் அங்கு அப்பிரதிகள் காணப்படவில்லை. பதிலாக வேறு சில ஆவணப்பிரதிகள் கொடுக்கப்பட்டன. அவற்றைப் பிரதேச செயலகங்களில் ஒப்படைத்த போதும் பயிற்சி சான்றிதழ் இன்றி உடனடியாக ஓய்வூதியம் வழங்க முடியாது எனவும் மாற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் பதிலளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற ஆசிரியர் என்பதற்கு ஆதாரமாக அ[illegible] சான்றிதழ் தேவை என்று கூறப்பட்டது. அவ்வாறாயின் இது வரை காலமும் எதனடிப் படையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டது?

இது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் தெரிவிக்கும் போது, இதற்காக குழு ஒன்றை அமைத்து தீர்மானம் எடுப்பதாகவும் இந்தக் குழுவிற்கு வடமராட்சி கல்வி வலயத்தில் இருந்து ஒருவரை தரும்படி கேட்டிருந்ததாகவும் ஆனால் அவர்கள் இது விடயத்தில் அக்கறை காட்டாமையால் வேறு திணைக்களங்களில் இருந்து பொருத்தமானவர்களை கேட்கப் போவதாகவும் கூறினார்.

இவ்வாறு குழு அமைத்து, ஓய்வூதியமும் நிலுவையும் பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கு கிடைக்கும் முன்னர் பலர் மரணமடைந்து விடக்கூடிய பரிதாப நிலை காணப்படுகிறது.

எனவே இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவனம் செலுத்தி மூத்த தலைமுறைக்கு தமது நன்றிக்கடனை செலுத்துவார்களா?

*பொலிகண்டி* — *தி. சுபாகரன்*


## நன்றி நவில்கிறோம்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆனந்தசாமி மடத்துக்கு உதவியளித்த நயினாதீவு மக்களுக்கும், அந்நிதியைப் பெற்றுத்தந்த அன்பர்களான சி.சின்னத்துரை, இளையதம்பி, கமல்ராஜ் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சேர்ந்த பணம்:- 27034.00

*ஆனந்தசாமிமடம், செல்வச்சந்நிதி.* (1101) **தலைவர்** சி. வல்லிபுரம்.

## விற்பனைக்கு

**எம்மிடம் பாவனையில் உள்ள**

☑ ஐஸ்கிறீம் மெசின்
☑ லைற் இஞ்சின்
☑ மின் இணைப்பு வெதுப்பி மெசின்
☑ குளிரூட்டி (பெரியது, சிறியது)
☑ குளிர் பருகை தயாரிப்பு உபகரணங்கள்
☑ ஐஸ் கோண் பெட்டி
☑ தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு**
**அமுதசுரபி குளிர்பருகை நிலையம்**
**497, யாழ்.சாலை**
**கிளிநொச்சி**

(சி-3636)


## கலந்துரையாடல்

மலரவன் நம்பிக்கை நிதியத்திலிருந்து உதவி பெற்றுவரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றி மீளவும் இந்த நிதியினைப் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது.

## மெய்வல்லுனர் போட்டி

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆரம்பப்பிரிவின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று நண்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் ஆ. ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கமும் சிறப்பு விருந்தினராக தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைச் செயலாளர் த. பஞ்சலிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


## நல்லூர் பிரதேச சபை

### திருநெல்வேலி நவீன சந்தை மேல்மாடிக்கடை கேள்வி அறிவித்தல்

10.04.2005 ம் திகதிமுதல் கீழ்வரும் திருநெல்வேலிச்சந்தை மேல்மாடிக் கடையை வாடகைக்கு விடுவதற்கான கேள்வி

| கடை | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கிரயத் தொகை (வற் தவிர்ந்தது) |
|---|---|---|---|
| திருநெல்வேலிச் சந்தை மேல்மாடிக்கடை இல 6 | 500.00 | 10000.00 | 108000.00 |

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:-
4.4.2005 திங்கள் 12.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி:-
5.4.2005 செவ்வாய் 10.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி:-
5.4.2005 செவ்வாய் பி.ப.2.00 மணி

**கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை காரியாலய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
18.03.2005. (சி-3921)

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்.

# அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எந்த முகாமும் இல்லையாம்!

## மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் முகாமோ அல்லது கருணா அணியினரது முகாமோ இல்லை என்பதை உறுதியாகக் கூற முடியும் என்று இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

வெலிக்கந்த - தீவுச்சேனைப் பிரதேசத்தில் கருணா அணியினரின் முகாம் இருப்பதாக சண்டே லீடரில் வெளியான செய்தி குறித்து பிரிகேடியர் தயா ரத்னாயக்க பி.பி.சிக்கு கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -


சண்டே லீடரில் வெளிவந்த செய்தியின் எந்தப் பின்னணி பற்றிக் கருத்துக்கூறமுடியாது. ஆனால் இந்த இடத்தில் இராணுவத்தினரும், பொலிஸாரும் கண்காணிப்புச் செய்து வருகின்றனர். அங்கே முகாம் என்று ஒன்றுமில்லை.

விடுதலைப் புலிகளின் போராளிகள் இந்தப் பகுதிக்கு வந்து செல்ல வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் இவர்களிடையே மோதல் நடந்து வருகிறது. சண்டேலீடர் தெரிவித்த ஆயுதம் தாங்கியவர் கருணா அணியா விடுதலைப் புலிகளா என்பது எங்களுக்கு கவலையுமில்லை, முக்கியமும் இல்லை.

ஆனால், அவர்கள் இங்கு வருவதும் போவதும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. இந்தப் பகுதியில் பல பதுங்குகுழிகள் இருக்கின்றன. ஏனெனில் கடந்த இருபது வருடங்களாக சண்டை நடந்து வந்த இடம் என்று அவர் குறிப்பிட்டார்.

# அரச நிலைப்பாடு தெளிவானதாயின் கருத்துக் கணிப்பு தேவையில்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



அதிகாரத்தைப் பரவலாக்குவது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவானது என்றால், மக்கள் கருத்து அறியும் வாக்கெடுப்புக்கு நூறு கோடி ரூபா நிதி செலவிடப்படத் தேவையில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதலில் அரசாங்கம் சமஷ்டி முறை தொடர்பான முடிவை எடுத்த பின்னர் அதை மக்கள் முன் வைக்கவேண்டும். சமஷ்டி முறை தொடர்பாக எமது கருத்தை நாம் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமது கட்சித் தலைவர்களுக்கிடையில் கூட்டம் ஒன்றைக் கூட்டவேண்டும்.

இதில் சமஷ்டி குறித்த தீர்மானம் ஒன்று எடுக்கவேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையில் தற்போது ஜனாதிபதி இல்லை. ஆனால் அமைச்சரவையின் தலைவி ஜனாதிபதி என்ற முறையில் அந்த முடிவை முதலில் அமைச்சரவைக்கு கொண்டுவரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கம்

## ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கம் கொண்டு வரவேண்டும் என அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் பௌத்த விகாரை ஒன்றில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எவருக்கும் தாம் கொண்டுள்ள கொள்கை அடிப்படையில் செயற்பட உரிமை வழங்கப்படவேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமே பாதுகாப்பை அதிகரிக்க முடியும் நாம் எந்த ஒரு மதத்திற்கும் எதிரானவன் அல்ல. ஒருமதத்தில் உள்ளவரை வேறு மதம் ஒன்றுக்கு மாற்றுவது தான் பிழையானது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் ஒரு வாரத்தினுள் கைச்சாத்தாகும்

## சிங்களப் பத்திரிகை தகவல்

சுனாமி அனர்த்தத்தால் பெரிதும் அழிவுகளுக்குள்ளான வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தம் இன்னும் ஒரு வாரத்தினுள் கைச்சாத்திடப்படவுள்ளது.

அரசாங்கத் தரப்பு தகவல்களை மேற்கோள் காட்டி சிங்கள நாளிதழ் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பொதுக் கட்டமைப்பு தொடர்பாக நோர்வே அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் சில திருத்தங்களைச் செய்ததன் பின் அரசாங்கத் தரப்பினர் அதனை ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகள் நோர்வேயால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு இணக்கம் தெரிவித்திருந்தனர்.

எனவே வெகு விரைவில் அரச தரப்பு உயரதிகாரி ஒருவரும் புலிகளின் உயர்மட்ட உறுப்பினர் ஒருவரும் கையொப்பமிடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

### வடக்கு - கிழக்கில்

# தகைமையற்ற 75 பேருக்கு தொண்டராசிரியர் நியமனங்கள்

(கொழும்பு)

75 தகைமையற்ற தொண்டராசிரியர்கள் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமிப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் பணிப்புரையின் பேரில் இந்த நியமனங்கள் தொடர்பாக இடம்பெற்ற ஒழுங்கீனங்களை ஆராய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தகைமையற்ற நியமனங்களை ரத்துச்செய்யுமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இந்த நியமனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு விதந்துரைத்துள்ளது.

## சுனாமி நிவாரணத்தில் பாகுபாடு; திருமலையில் மக்கள் போராட்டம்

திருமலையில் ஜமாலியா பிரதேச மக்கள் நேற்று திருமலை பட்டணமும் - சூழலும் பிரதேச செயலகத்தின் முன்னால் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

தமக்குச் சரியான முறையில் சுனாமி நிவாரணங்கள் எதுவும் பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும், நிவாரண பகிர்ந்தளிப்பில் காணப்படும் பாகுபாட்டை உடனடியாக தீர்க்குமாறு கோரியுமே இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் பிரதேச செயலாளர் காரியாலயத்தைச் சுற்றியிருந்ததால் ஊழியர்கள் எவரும் அலுவலகத்துக்குச் செல்ல முடியவில்லை.

பின்னர் பிரதேச செயலாளருக்கும் மக்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று இணக்கப்பாடு ஏற்பட்டதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (01)

# மட்டக்களப்பில் அரசாங்க அதிகாரிகள் நேற்று ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுக்காலை அரச உயரதிகாரிகளின் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி பிரதி ஆணையாளர்கள், சமுர்த்தி ஆணையாளர்கள், கணக்காளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

அரச ஊழியர்களின் பாதுகாப்பு, அரச உடமைகளுக்கான பாதுகாப்பு என்பவற்றுக்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும். அரச நிர்வாகத்தில் தேவையற்ற தலையீடுகள் நீக்கப்படவேண்டும், மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் வன்முறையைப் பிரயோகித்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. (01)

# இலங்கை இராணுவ அதிகாரிகள் குழு மேற்குக்கரை, காஸாவுக்கு விஜயம்

(கொழும்பு)

இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருக்கும் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தலைமையிலான குழுவினர் ஹமாஸ் அமைப்பினருடன் இஸ்ரேலியப் படைகள் சண்டையிட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டதாகத் தெரியவருகிறது.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட மற்றும் மேஜர் ஜெனரல் காமினி ஹெற்றியாராச்சி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே ஆகியோரைக் கொண்ட இந்தக் குழுவினர், மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளுக்குச் சென்று - மோதல்கள் மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெற்ற பகுதிகளைப் பார்வையிட்டனர்.

அத்துடன், ஜோர்தான், சிரியா, லெபனான் எல்லைப் பகுதிகளுக்கும் சென்று இஸ்ரேலியப் படைகள் படை நடவடிக்கைகளை மேற்கொண்டது தொடர்பாகவும் இந்தக் குழு ஆராய்ந்துள்ளது.

அத்துடன், டெல் அவிவ் நகரில் நடந்த 40 நாடுகள் பங்கேற்ற முக்கிய பாதுகாப்பு மாநாட்டிலும் இவர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச சேவையில் 1500 பேருக்கு புதிய நியமனம்

அரச சேவையில் எழுதுநர் மற்றும் அதற்குச் சமனான பதவிகளுக்கு ஏப்ரல் முதலாம் திகதி முதல் 1500 பேர் நியமனம் பெறவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பதாக இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் பொது நிர்வாக அமைச்சில் இடம்பெற்றதுடன், ஏற்கனவே அரச துறை எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களே நியமனம் பெறவுள்ளனர்.

# சென்னையில் தங்கியிருந்த யாழ்.வாசி பொலிஸாரால் கைது

(கொழும்பு)

உரிய ஆவணங்கள் இன்றி சென்னை - மடிப்பாக்கத்தில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரின்ஸ் ருஜனிக் என்பவர் கியூ பிராஞ்ச் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த 6 ஆண்டுகளாக ருஜனிக்கின் தாயார் சென்னை மடிப்பாக்கத்தில் குடியிருந்து வருகிறார்.

தாயாரைப் பார்ப்பதற்காக கொழும்பிலிருந்து இந்தியா வருவதற்கு அவர் முயற்சிசெய்த போது விசா கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் இரு வாரங்களுக்கு முன் படகு மூலம் இந்தியாவுக்குச் சென்று தாயாருடன் தங்கியிருந்தார்.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து, மடிப்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டை சோதனையிட்டபோது, குறிப்பிட்ட நபர் கைதுசெய்யப்பட்டு அவர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.









யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக சம்பந்தன் விருது வழங்கும் விழாவும், இரு நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றபோது - விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், பேராசிரியர் ச.மௌனகுருவுக்கு பொன்னாடை போர்த்தி சம்பந்தன் விருதை வழங்குவதையும், நூலின் முதற்பிரதியை கவிஞர் சோ.பத்மநாதன் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வெலிங்டன் டெஸ்ட்
# 244 ஓட்டங்களுக்குள் சுருண்டது நியூஸிலாந்து



(வெலிங்டன்)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று - நியூஸிலாந்து அணி 244 ஓட்டங்களுக்குள் முதல் இனிங்ஸில் ஆட்டமிழந்தது.

அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டங்களைப் பெற்றநிலையில் டிக்ளேர் செய்தபின்னர், நியூஸிலாந்து அணி ஆடத் தொடங்கியது.


மூன்றாம்நாள் ஆட்டநேரமுடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 122 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்து, நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி நீண்டநேரம் நின்றுபிடிக்கவில்லை.

244 ஓட்டங்கள் எடுப்பதற்குள்ளாகவே நியூஸிலாந்து அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து ஆட்டமிழந்தது.

பிராங்ளின் 26, மக்மிலன்-20, மக்கலம் -3, விற்றோரி-45, ஓபிரேய்ன்-5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் கஸ்பரோவிச் -3, வோன்-3, மக்ரா-2, ஜிலெஸ்பி-1, கிளார்க்-1 விக்கெட்டை வீழ்த்தினர்.

244 ஓட்டங்களுக்குள் நியூஸிலாந்து அணியை வீழ்த்திய அவுஸ்ரேலிய அணி கப்டன் பொண்டிங், பலோ ஒன் கொடுத்து மீண்டும் நியூஸிலாந்து அணியைத் துடுப்பெடுத்




தாடக் கேட்டுக்கொண்டார்.

ஆனால், தேனீர் இடைவேளைக்குள் மழை குறுக்கிட்டதால் நியூஸிலாந்து அணி ஆடாமல் தப்பித்துக் கொண்டது.

ஆட்டத்தின் இறுதிநாளான இன்று நாள் முழுவதும் தாக்குப்பிடித்தால் மட்டுமே நியூஸிலாந்து அணியால் தோல்வியிலிருந்து தப்பமுடியும்.

# மேற்கிந்திய தீவுகள் அணியிலிருந்து பிறைன் லாரா நீக்கப்பட்டார்!



தென்னாபிரிக்கத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இருந்து லாரா, சர்வான் உட்பட முன்னணி வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அணியின் புதிய கப்டனாக சந்தர்போல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டில் விளம்பரதாரர் ஒப்பந்தம் தொடர்பாக பிரச்சினை வெடித்தது. சில வீரர்களின் தனிப்பட்ட விளம்பர ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும்படி கிரிக்கெட் சபை உத்தரவிட்டது. இதை ஏற்க மறுத்த லாரா, சர்வான், கெய்ல், பிடல் எட்வார்ட்ஸ், பிராவோ, டுவெய்ன் ஸ்மித், ரவிராம்போல் ஆகிய ஏழு வீரர்கள் நீக்கப்பட்டனர்.

தென்னாபிரிக்கத் தொடருக்கு சந்தர்போல் தலைமையில் இளம் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் எதிர்வரும் 31ஆம் திகதி கயானாவில் தொடங்கவுள்ளது.

முதற்போட்டிக்கான 14பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி வருமாறு -

சந்தர்போல் (கப்டன்), கொட்னி பிரவுண் (துணைக் கப்டன்), ஹின்ட்ஸ், டேவன் ஸ்மித், டொனாவன் பேகன், நர்சிங் டியோநரைன், டேரன் கங்கா, ரியான் ஹின்ட்ஸ், கொலிமோர், பெத்ரோ கொலின்ஸ், வாஷிங்டன், டேரன் பவல், ஜெரோம் டெய்லர், ரியான் கிங்.

# கிளைஸ்டர்ஸ் சம்பியன்



(இன்டியன் வெல்ஸ்)

பசுபிக் ஓபன் ரெனிஸ் தொடரில் கிம் கிளைஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

அமெரிக்காவின் இன்டியன் வெல்ஸ் நகரில் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் முதனிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன் போர்ட், பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸ் மோதினர். அபாரமாக ஆடிய கிளைஸ்டர்ஸ் 6-4, 4-6, 6-2 என்ற செட்களில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

ஆண்கள் பிரிவில் நடந்த அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் அன்டி ரொடிக், அவுஸ்ரேலியாவின் லெய்டன் ஹெவிட்டைச் சந்தித்தார். இதில் ஹெவிட் 7-6, 6-7, 7-6 என்ற செட் கணக்கில் போராடி வென்றார். மற்றொரு போட்டியில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-1 என்ற செட்களில் ஆஜென்ரீனாவின் கில்லர்மோ கேனசை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# விளையாட்டு

# பழைய மாணவர்கள் கிரிக்கெட் மத்திய கல்லூரி அணி வெற்றி!

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாரணவர் அணிக்கும் இடையில் வருடா வருடம் நடைபெறும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் அணி வெற்றிபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள் 25.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இதில் சிறிதரன் 24, அகிலன் 23, சஞ்சீவ் 20, லவேந்திரா 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியின் சார்பில் பிரசாத் 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பிரகாஸ் 7 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கபில்ராஜ் 4.4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கஜீதரன் 4 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 24.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இதில் பிரகாஸ் 22, கார்த்தீபன் 19, தனுஷ்காந்தன் 18 ஓட்டங்களையும், கஜீதரன் ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் லவேந்திரா 9.2 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கௌரிபாகன் 3 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

## நல்லூர் பிரதேச சபை அணி வெற்றிபெற்றது!

(யாழ்ப்பாணம்)

எச்.என்.பி.அஸூரன்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் - யாழ்.பல்கலைக்கழக ஊழியர் அணிக்கும் நல்லூர் பிரதேச சபை அணிக்குமிடையேயான ஆட்டம் 12ஆம் திகதி யாழ்.ஸ்ரான்லி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக ஊழியர் அணி 20 ஓவர்களில் 142 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச சபை அணி 20 ஓவர்களில் 145 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

# பெண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் இன்று ஆரம்பம்

(கேப்ரவுன்)

உலகக்கிண்ண பெண்கள் கிரிக்கெட் போட்டி இன்று தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தப்போட்டிகளில் தென்னாபிரிக்கா, அயர்லாந்து, நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் பற்கேற்கவுள்ளன.

இன்று செஞ்சூரியன் மைதானத்தில் தென்னாபிரிக்க - அயர்லாந்து அணிகளும், பிரிட்டோரியாவில் நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளும், இலங்கை - இந்திய அணிகளும், இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளும் மோதவுள்ளன.

# மினி உலக கிண்ணத்தில் 5 நாடுகளே பங்கேற்கும்!

2006 ஐ.சி.சி. சம்பியன்ஸ்கிண்ண போட்டியில் 8 நாடுகளே விளையாடுமென சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் ஈசான் மணி தெரிவித்துள்ளார்.


மினி உலகக் கிண்ண போட்டியாகக் கருதப்படும் சம்பியன்ஸ் கிண்ண போட்டி கடைசியாக இங்கிலாந்தில் நடைபெற்றபோது 12 நாடுகள் பங்கேற்றன.

ஆனால் சம்பியன்ஸ் கிண்ணம் என்ற பெயரைக் கருத்திற்கொண்டு முன்னிலையில் உள்ள 8 நாடுகள் மட்டுமே பங்குபற்றும்விதமாக இந்தப் போட்டி மாற்றியமைக்கப்படவுள்ளது.

போட்டியை நடத்தும் நாடுடன் முன்னிலையில் உள்ள 4 நாடுகள் நேரடியாக சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் விளையாடும். தகுதிப் போட்டியின் அடிப்படையில் மற்ற 3 நாடுகள் தெரிவு செய்யப்படும்.

அதாவது மற்ற நாடுகள் அனைத்தும் பங்கேற்கும் விதமாக ஒரு போட்டி நடத்தப்பட்டு முதல் 3 இடங்களைப் பெறும் நாடுகள் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கு முன்னேறும் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

# ஹர்பஜனின் பந்துவீச்சு குறித்து ஐ.சி.சியிடம் மீண்டும் புகார்!



(லண்டன்)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஹர்பஜன்சிங். கொல்கத்தாவில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற 2ஆவதுடெஸ்டில் அவரது பந்துவீச்சு எறியும் வகையில் இருந்ததாக நடுவர்கள், ஐ.சி.சியிடம் புகார் கூறியுள்ளனர்.

மேலும் அவர் 3 வாரத்துக்குள் ஐ.சி.சியிடம் ஆஜராகி தனது பந்துவீச்சு முறையை சரிசெய்துகொள்ள வேண்டுமென ஐ.சி.சி. கூறியுள்ளது. இதனால் அவர் 24ஆம் திகதி தொடங்கும் 3ஆவது டெஸ்டில் பங்கேற்பாரா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

# இந்திய அணியில் மாற்றமில்லை!

பெங்களூரில் நடைபெறும் இறுதி டெஸ்ட் போட்டிக்காக இந்திய அணியில் வீரர்கள் மாற்றம் செய்யப்படவில்லை.

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாளைமறுதினம் பெங்களூரில் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிக்கான இந்திய அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றிருப்பதை அடுத்து, அணியில் மாற்றம் செய்வதற்கான அவசியம் இல்லை என்று இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் நாயர் தெரிவித்தார்.

இந்திய அணி -

சௌரவ் கங்கூலி (கப்டன்), வீரேந்தர் ஷேவாக், கௌதம் காம்பீர், ராகுல் ராவிட், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ். லக்ஷ்மன், தினேஸ் கார்த்திக் (விக்கெட் கீப்பர்), இர்பான் பதான், ஹர்பஜன்சிங், அனில் கும்ளே, லக்ஷ்மிபதி பாலாஜி, சகீர்கான், ஆசிஷ் நெஹ்ரா, யுவராஜ் சிங்.

பாகிஸ்தானுடனான ஒருநாள் பயிற்சி ஆட்டத்துக்கான இந்திய ஏ அணி -தினேஷ் மொங்கியா (கப்டன்), தவான், டோனி, உதப்பா, ராய்னா, நீரஜ் பட்டேல், வேணுகோபால் ராவ், ஸ்ரீராம், ஜே.பி.யாதவ், பகதுலே, பவார், சிங், போஸ், பண்டாரி.

# கரப்பந்தாட்ட போட்டிகளில் சென்.ஜோன்ஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட யாழ்.கோட்ட பாடசாலைகளிடையில் நடைபெற்றுவந்த கரப்பந்தாட்ட போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மூன்று பிரிவுகளிலும் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.


19 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ். மத்திய கல்லூரியும், மூன்றாமிடத்தை சென். சாள்ஸ் மகாவித்தியாலயமும் பெற் றுள்ளன.

17வயதுப் பிரிவில் முதலாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ்.மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை சென்.சாள்ஸ் மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன.

15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ்.மத்திய கல்லூரியும், மூன்றாமிடத்தை புனித ஜோசப் வித்தியாலயமும் பெற்றுள்ளன.

யாழ்.கோட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் யாழ்.வலயமட்ட போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன. (58)

# ஐ.சி.சி.தரவரிசையில் முதலிடத்தில் ராவிட்!



(டுபாய்)

பாகிஸ்தான் அணியுடனான கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் - இரண்டு சதங்களை அடித்த ராகுல் ராவிட், ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தார்.

அத்துடன் இந்தப் போட்டியில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய அனில் கும்ளேயும், நான்காம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஐ.சி.சி. வெளியிட்டிருக்கும் புதிய தரவரிசைப்படி துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்துவீச்சாளர்கள் விபரம் வருமாறு -

**துடுப்பாட்ட வீரர்கள்**

1.ராகுல் ராவிட் (இந்தியா) 892
2.கலிஸ் (தென்னாபிரிக்கா) 886
3.ரிக்கி பொண்டிங் (அவுஸ்) 849
4.லாரா (மேற்கிந்தியத் தீவுகள்) 842
5.டேமியன் மார்ட்டின் (அவுஸ்) 813
6.ஷேவாக் (இந்தியா) 811
7.டெண்டுல்கர் (இந்தியா) 785
8.கில்கிறிஸ்ட் (அவுஸ்) 773
9.ஸ்ரரஸ் (இங்கிலாந்து) 751
10.சங்கஹார (இலங்கை) 747

**பந்துவீச்சாளர்கள் -**

1.மக்ரா (அவுஸ்) 872
2.முரளிதரன் (இலங்கை) 851
3.பொலக் (தென்னாபிரிக்கா) 837
4.கும்ளே (இந்தியா) 818
5.அக்தர் (பாகிஸ்தான்) 794
6.ஜிலெஸ்பி (அவுஸ்) 769
7.என்ரினி (தென்னாபிரிக்கா) 765
8.ஷேன் வோன் (அவுஸ்) 758
9.ஹார்மிசன் (இங்கிலாந்து) 717
10.ஹொகாட் (இங்கிலாந்து) 701
10.சமிந்த வாஸ் (இலங்கை) 701

# முன்னிரவு வேளையில் அடிக்கடி மின் தடை

முன்னிரவு நேரங்களில் அடிக்கடி
மின் தடை ஏற்படுவதால், குடாநாட்
டின் பல பகுதிகளிலும் மின் பாவனை
யாளர்கள் பாதிக்கப்படுவதாக முறைப்
பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு 7 மணிக்கும், 9 மணிக்கும்
இடைப்பட்ட நேரங்களில் கடந்த சில
நாட்களாக மின்தடை ஏற்பட்டு வரு
கிறது.

இந்த நேரங்களில் பாடங்களைப்
படிக்கும் மாணவர்களும், வேலை
முடிந்து வீடுகளுக்கு திரும்புவர்களும்
பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடு
கிறது.

மேலும் மின்தடை இடம்பெறும்
நேர ஒழுங்கைப் பயன்படுத்தி, திரு
டர்களும் தமது கைவரிசைக் காட்டி
வருவதாகவும் தெரியவருகிறது.(206)

## வருடாந்த மஹோற்சவம்

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப்
பிள்ளையார் ஆலய வருடாந்த
மஹோற்சவம் - கடந்த புதன்கிழமை
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் வியாழக்கிழமை பகல்
12 மணிக்கு தேர்த்திருவிழாவும்,
மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்
திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

தீர்த்தோற்சவ தினத்தன்று அடி
யார்களுக்கு அன்னதானம் வழங்
கப்படவுள்ளதாக, ஆலய நிர்வாகத்தி
னர் தெரிவித்துள்ளனர். (113)

# வேலணை மத்திய கல்லூரியில் மாணவர்களுக்கு மதிய உணவு

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரியில்
கல்வி பயிலும் மாணவர்களுக்கு
நாளாந்தம் மதிய உணவு வழங்
கப்பட்டு வருகிறது.

லண்டனில் வசிக்கும் பழைய
மாணவர் சங்கத்தினரே இந்த உணவு
வழங்கலுக்கான நிதியுதவியை
வழங்கி வருகின்றனர். பாடசாலை
மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்
கள் எனச் சுமார் 600 பேர்வரை இந்த
மதிய உணவைப் பெற்று வரு
கின்றனர்.

பாடசாலைச் சுற்றாடலைவிட, தூர
இடங்களில் இருந்து வரும் மாணவர்
கள் மற்றும் வறிய மாணவர்களுக்கு
இது பெரும் பயனாக இருப்பதுடன்,
மாலை நேர வகுப்புகளை இலகுவாக
நடாத்தவும், விளையாட்டு தொடர்
பான பயிற்சிகளை மாலை நேரங்க
ளில் நடத்தவும் முடிகிறது.

இது தவிர இடைவிலகும் மாண
வர் தொகை குறைந்துள்ளதுடன்,
வறிய குடும்பங்களது ஒருநேர
உணவுத் தேவையும் இந்த மதிய
உணவு வழங்கும் செயற்பாட்டால்
நிறைவேற்றப்படுவதாக கல்லூரி அதி
பர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 19 ஆம் திகதி
முதல் இந்தத் திட்டம் செயற்படுத்தப்
பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(113,44)

# வீதியால் சென்ற இளைஞன்மீது பட்டப்பகலில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த
இனந்தெரியாத குழு - சைக்கிளில்
வந்தவரைத் தாக்கிய சம்பவத்தில்
இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து,
யாழ்.போதனா வைத்தியசாலையில்
சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்
ளார்.

இந்தச் சம்பவத்தில் திருநெல்
வேலியைச் சேர்ந்த பொன்னம்பலம்
சுகந்தன் (வயது 25) என்பவரே
காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய
வருவதாவது -

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30
மணியளவில் கைலாசபிள்ளையார்
கோவிலடிப் பகுதியால் சைக்கிளில்
வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த
போது, மோட்டார் சைக்கிளில் வந்த
மூவர் - சைக்கிளில் சென்றவரைத்
தள்ளி வீழ்த்தித் தாக்கியதுடன், சைக்
கிளை அவர் மேல் தூக்கி எறிந்து
காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்ற
தாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த
பிரஸ்தாப இளைஞன் - அயலவர்க
ளின் உதவியுடன் வைத்தியசாலை
யில் சேர்க்கப்பட்டார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவி ஒருவர் படுகாயம்

யாழ்.மனோகரா சந்தியில் நேற்று
முன்தினம் இடம் பெற்ற மோட்டார்
சைக்கிள் - சைக்கிள் விபத்தில், மாணவி
யொருவர் காயமடைந்த நிலையில்
யாழ். போதனா வைத்தியசாலையில்
சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்
ளார்.

இந்தச் சம்பவத்தில் ஓட்டுமடத்
தைச் சேர்ந்த ஜெயராசா அஞ்சலா
(வயது 16) என்பவரே காயமடைந்
தவராவர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய
வருவதாவது -

தனியார் கல்வி நிறுவனத்துக்குச்
சென்றுகொண்டிருந்த மாணவி-
மனோகரா சந்தியிலிருந்து நாவலர்
வீதியைக் கடக்க முற்பட்டவேளை,
கே:கே.எஸ் வீதியால் வேகமாக வந்த
மோட்டார் சைக்கிள் மோதியதால், இந்த
விபத்து ஏற்பட்டதாக தெரியவருகிறது.

# தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு கொழும்பில் உளவளப் பயிற்சிநெறி

சுனாமி பாதிப்புக்குட்பட்ட பகுதிக
ளில் உளவளத்துணைச் சேவையில்
ஈடுபடுத்துவதற்காக சுனாமி பாதித்த
மாவட்டங்களில் இருந்து தெரிவு
செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான
விசேட உளவியல் பயிற்சி வகுப்
பொன்று - கல்வி அமைச்சின் வழி
காட்டலும், ஆலோசனை வழங்கலும்
பிரிவினரால் நேற்று நடத்தப்பட்டது.

இரு வாரங்களுக்கு ஒருநாள்
என்ற அடிப்படையில் வழங்கப்பட
வுள்ள இந்தப் பயிற்சி நெறியானது,
கடந்த 7 ஆம் திகதி முதல் ஆரம்
பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் கலந்து
கொள்ளவரும் ஆசிரியர்கள் - குறித்த
இருவார காலத்துக்கான செயற்பாட்ட
றிக்கைகளையும் தம்மோடு எடுத்து
வருமாறு, கல்வி அமைச்சின் வழி
காட்டலும் ஆலோசனை வழங்கலும்
பிரிவு உதவிக் கல்வி ப்பணிப்பாளர்
கே.பி.என் பிரேமசிறி பணித்துள்
ளார். (31)

# சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்
பாள் தேவஸ்தான அறநெறிப் பாட
சாலையால் நடத்தப்பட்ட சிவராத்திரி
தினவிழாப் போட்டி முடிவுகள் வெளி
யிடப்பட்டுள்ளன.

ஆண்டு 3 - பேச்சு : 'பண்பு
டைமையிலும்', திருக்குறள் : அன்புட
மையிலும் 1 ஆம் இடம் க.சுஜிதா.

ஆண்டு 3 - ஆத்திசூடி 2 ஆம்
இடம் லோ.சோபிதா.

ஆண்டு 3 - திருவங்கமாலை
ஓதல் 3 ஆம் இடம் சி.சரண்யா.

ஆண்டு 4 - திருநீற்றுப்பதிகம்
ஓதல் 1 ஆம் இடம் ச.தயாகரன்.

ஆண்டு 6 - திருவெண்பாவை
ஓதல் 1 ஆம் இடம் சி.கபில்றாஸ்.

ஆண்டு 6 - திருவெண்பாவை
ஓதல் 2 ஆம் இடம் சி.கமலதீபன்.

ஆண்டு -8 கதை சொல்லல் 1
ஆம் இடம் ந.நிவேதன்.

ஆண்டு 9 - சிவபுராணம் ஓதல் 1
ஆம் இடம் சி.வேணுமதி.

ஆண்டு 10 - சிவபுராணம் ஓத
லில் 2 ஆம் இடம், திருவெண்பாவை
ஓதலில் 1 ஆம் இடம், கோளறுபதிகம்
ஓதலில் 1 ஆம் இடம், பேச்சு -
சிவராத்திரிதின மகிமை 1 ஆம் இடம்
கா.கல்பனா.

ஆண்டு 11- சிவபுராணம் ஓதலில்
3 ஆம் இடம், கோளறுபதிகம் ஓதலில்
2 ஆம் இடம் கா.கஜலக்சுமி

ஆண்டு 9 - காரைக்காலம்
மையார் புராணம் ஓதலில் 1 ஆம்
இடம், திருநீற்றுப்பா ஓதலில் 2 ஆம்
இடம் லோ.லோகா.

வெற்றிபெற்றவர்களுக்கான பரி
சில்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை
பூரணை தினத்தன்று ஆலயத்தில்
வைத்து ஆலய பிரதம சிவாச்சார்யார்
சிவஸ்ரீ சோ.மதுசூதனக் குருக்கள்
மற்றும் ஆலயப் பிரமுகர்களால் வழங்
கப்படவுள்ளது.
(24)

## சின்னஞ்சிறு செய்திகள்

### 'பொறுப்பனோ யான்' நூல் அறிமுகவிழா

கடம்பனின் ''பொறுப்பனோ
யான்" எனும் நாடக நூலின் அறிமுக
விழா - நாளை மாலை 3.30
மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக்
கல்லூரி வள்ளியம்மை மண்டபத்
தில் நடைபெறவுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபை பேரா
யர் கலாநிதி சு.ஜெபநேசன் தலை
மையில் நடைபெறவுள்ள இந்த
விழாவில் - பிரதம விருந்தி னராக
சங்கானை பிரதேச செயலர் சு.ஏ.
மோகனராஜ்ஜும், சிறப்பு விருந்தின
ராக வலிகாமம் வலய பிரதிக்கல்விப்
பணிப்பாளர் எஸ்.சுந்தர சிவமும்
கலந்து கொள்ளவுள்ளனர்.

### ஆன்மீக சொற்பொழிவு

சாவற்கட்டு அறநெறிப் பாட
சாலையில் கற்கும் மாணவர்களின்
நன்மை கருதி, இந்து கலாசார
அமைச்சால் பிரதி வெள்ளிக்கிழமை
தோறும் ஆன்மீக சொற்பொழிவு
நடத்தப்பட்டு வருகிறது.

இந்த அறநெறிப் பாடசாலையில்
சுமார் 200 மாணவர்கள் கல்வி
பயின்று வருகின்றனர். இவர்களி
டம் சமயநெறிமுறை, ஆன்மீக
வாழ்வு என்பனவற்றை வளர்த்துக்
கொள்ளும் நோக்குடன் - அறநெறிப்
பாடசாலை நிர்வாகத்தினரின்
வேண்டுகோளுக்கு இணங்க, இந்த
ஆன்மீக சொற்பொழிவை இந்து
கலாசார அமைச்சு நடத்தி வருகிறது.

சாவற்கட்டு சந்தியிலுள்ள ஞான
வைரவர் ஆலயத்தில் ஒவ்வொரு
வெள்ளிக்கிழமையும் நடைபெறும்
இந்த சொற்பொழிவில் - இந்து
கலாசார அமைச்சால் ஒழுங்கு செய்
யப்படும் மூத்த சைவப் பெரியார்க
ளால் உரைநிகழ்த்திப்பட்டு வரு
கின்றது. (44)

### அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பு

சாவற்கட்டு இளைஞர்களால்
சாவற்கட்டு மாணவர் முன்னேற்ற
நிலையத்துக்கு 600 அப்பியாசக்
கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கி
யுள்ளனர்.

சாவற்கட்டில் படித்த இளைஞர்க
ளால் இலவசமாக நடாத்தப்படும்
இந்த கல்விச் செயற்பாட்டுக்கான
மாணவர் முன்னேற்ற நிலைய
மாணவர்களின் கல்வித்தரத்தை
மேம்படுத்தும் நோக்குடன், இந்த
அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்
பாக வழங்கப்பட்டன.

இந்த 600 அப்பியாசக் கொப்பி
களையும் மாணவர் முன்னேற்ற
நிலையத்தினர் மிக வறிய மாண
வர்கள் 200 பேருக்கு தலா 6 கொப்
பிகள் வீதம் வழங்கினர்.
(44)

# ஊர்காவற்துறை இலங்கை வங்கி கிளையின் நடமாடும் சேவை

தற்போது வேலணையில் இயங்கி
வரும் ஊர்காவற்துறை இலங்கை
வங்கிக்கிளை நாளை முதல் வாரத்
தில் ஒவ்வொரு புதன் கிழமைக
ளிலும் நடமாடும் வங்கிக் கரும
பீடத்தை காலை 10 மணியிலிருந்து
பிற்பகல் 1 மணி வரை ஊர்கா
வற்துறை உதவி அரசாங்க அதிபர்
பணிமனையில் நடத்தவுள்ளது.

இதில் வங்கி வாடிக்கையாளர்கள்
தங்களது நடைமுறைக் கணக்கு,
சேமிப்புக் கணக்கு, பண வைப்பு
மீளப் பெறுதல், வெளிநாட்டுப் பணப்
பரிமாற்றம் என்பவற்றைக் கையாள
முடியும்.

அத்துடன், ஓய்வூதியர்களுக்கான
ஓய்வூதியம் ஆசிரியர் சம்பளம், அரச
நிறுவனங்களுக்கான சம்பளம் என்
பவற்றை அந்தத் திகதிகளில் வரும்
நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்
எனவும் வங்கி நிர்வாகம் தெரிவித்
துள்ளதாக, ஊர்காவற்துறை வர்த்தக
சங்கம் அறிவித்துள்ளது.

## பற்றைக்குள் இருந்து சைக்கிள் மீட்பு

கல்வியங்காடு சந்திரசேகரப்
பிள்ளையார் கோயிலடிப் பகுதியி
லுள்ள பற்றையிலிருந்து, பெண்களுக்
கான லுமாலா சைக்கிள் ஒன்று
கடந்த வியாழக்கிழமை நண்பகல்
வேளை மீட்டுள்ளதாக கோப்பாய்ப்
பொலி ஸார் தெரிவித்தனர்.

இதை உரியவர் ஆதாரம் காட்
டிப் பெற்றுக்கொள்ளலாம் என
பொலிஸ் நிலைய அதிகாரி அருண
கிரி ஸ்ரீ செல்வம் தெரிவித்தார்.
(82)

## தென்னங்கன்றுகள் விற்பனை

நல்லூர் பிரதேச செயலகத்தால்
மானிய விலைக்குத் தருவிக்கப்பட்ட
400 தென்னங்கன்றுகள் - கிராம
அலுவலர்களூடாக ஒரு தென்னங்
கன்று 10 ரூபாப்படி பொது மக்
களுக்கு வழங்கப்படவுள்ளது.
(63)

# யாழ்ப்பாணத்தின் சிறந்த பாடகர் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்
டுத் தினத்தன்று நடைபெறவுள்ள
அரியாலை 86 ஆவது சுதேசிய
திருநாட் கொண்டாட்ட விழாவில்
மாவட்ட ரீதியிலான யாழ்ப்பாணத்
தின் சிறந்த பாடகர் போட்டிக்கான
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்
ளன.

எதிர்வரும் 12.04.2005 அன்று
சரஸ்வதி சன சமூக நிலைய அமரர்
விஸ்வநாதன் அரங்கில் ஆரம்ப
கலை நிகழ்வுக ளும் போட்டிகளுக்
கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன.


14.04.2005 பகல் அரியாலை
சனசமூக நிலைய விளையாட்டரங்
கில் விளையாட்டுப் போட்டிகளும்,
அதில் கழகங்களுக்கான அஞ்சலோட்
டமும் இடம்பெறும்.

அன்று மாலை அரியாலை சன
சமூக நிலைய காசிப்பிள்ளை அரங்
கில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற
வுள்ளன.

ஐங்கரன் இசைக்குழுவினரின்
இசையமைப்பில் 'யாழ்ப்பாணத்தின்
சிறந்த பாடகர்' போட்டியும், யாழ்.
கல்வியியற் கல்லூரி நாடகத்துறை
விரிவுரையாளர் இ.கமலநாதனின்
நெறியாள்கையில் பிரமாண்டமான
தயாரிப்பான 'தாய்த் திருநாடு' என்
னும் நாடகமும் இடம்பெறும்.

10.04.2005 அன்று அதிகாலை
உள்ளூர் போட்டியாளர்களுக்கான
மரதம், ஓட்டம் சைக்கிள் ஓட்டம்
ஆகியன இடம்பெறவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு சுதே
சிய திருநாட்கொண்டாட்ட விழாவின்
பொதுச் செயலாளருடன் தொடர்பு
கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.





யாழ். மருத்துவபீட 26 ஆம் அணி மாணவர்கள் -
அமரர் கந்தசாமி சரவணபவனின் முதலாம் ஆண்டு
நினைவு தினத்தை முன்னிட்டு, நேற்று யாழ். வைத்திய
சாலை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்வதைப்
படத்தில் காணலாம்.

## பல்சுவைச் சிதறல்

பல்சுவை அரங்கு

# சுமத்ராவில் மீண்டும் அதிர்வு ஏற்படும் என எச்சரிக்கை

கடந்தவருட இறுதியில் இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவினருகே இடம்பெற்ற கடலுக்கடியிலான பூமியதிர்வு போன்று, மேலும் ஒரு பூமியதிர்வு அந்தப் பகுதியில் ஏற்படலாம் என பிரிட்டனின் அல்ற்சர் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழுவொன்று எச்சரித்துள்ளது.



இந்திய பூமித்தகடு பர்மிய தகட்டின் கீழாகச் செருகியதனால், கடந்த டிசம்பரில் பூமியதிர்வு ஏற்பட்டது. இந்தச் செருகலினால் இரு தகடுகளிடையே ஏற்படும் அமுக்கம் இன்னும் நீடிப்பதனால், மீண்டும் இந்தப் பகுதியில் பூமியதிர்வு ஏற்படும் என, அந்தக் குழு எச்சரித்துள்ளது. இந்தப் பூமியதிர்வு 7 முதல் 8 வரையான ரிச்டர் அளவுடையதாக இருக்கலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னைய அதிர்வு 9 ரிச்டர் அளவில் அமைந்ததால், அதனால் ஏற்பட்ட வெடிப்புகள் மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புற்றுநோய் கலங்களை தடுக்கும் பரம்பரை அலகு சிகிச்சை

புற்றுநோய்க் கலங்களை மயக்கநிலைக் குட்படுத்தி கோமா நிலையில் வைத்திருப்பதன் மூலம் புற்றுநோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என, மேரி கியூரி ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட பரிசோதனை ஒன்றின்மூலம் தெரியவந்துள்ளது.




தற்போது புற்றுநோய்ச் சிகிச்சையாக - புற்றுநோய்க் கலங்களை வெட்டி அல்லது கொன்று அழிக்கப்படுவதே பின்பற்றப்படுகிறது. புதிய சிகிச்சை முறையில் புற்றுநோய்க் கலங்கள் தொடர்ந்து பிரிகையடையாமல் தடுக்க, அவற்றைச் செயலிழந்த நிலையில் வைத்திருக்கும் முறையே கைக்கொள்ளப்படுகிறது.

பரம்பரை அலகு Tb x 2 என்ற பரம்பரை அலகுமூலம் தோல் புற்றுநோய்க் கலங்கள் பிரிவதைத் தடுக்க முடியும் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்தப் பரம்பரை அலகைச் செயலிழக்க வைப்பதன்மூலம், கலப்பிரிவு தடுக்கப்படுகிறது. எனினும், இந்தப் பரம்பரை அலகுமூலம் தோல் புற்றுநோய்த் தாக்கத்தை மட்டுமே தடுக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

# எரிமலை வெடிப்புகளிலிருந்து காப்பதற்கு நடவடிக்கை

எரிமலை வெடிப்புகள் ஏற்படும்போது, உடனடி நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக மீட்பு நடவடிக்கை குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என, புவியியலாளர் குழுவொன்று ஆலோசனை தெரிவித்துள்ளது.

சுனாமி தாக்குதலின் பின்னர் இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எரிமலை குமுறல்கள் அடிக்கடி ஏற்படுவது - தற்போது பூமியின் அமைதியற்ற தோற்றத்தைக் காட்டுவதால், இயற்கை அழிவுகளிலிருந்து பொது மக்களைக் காப்பதற்கு ஆயத்தங்கள் தேவை என்பது உணரப்பட்டுள்ளது.



# பன்றிகளின் சோம்பல்



காடுகளில்வாழ்கின்ற பன்றிகளிலும் பார்க்க, பற்றைகளில் வாழ்கின்ற பன்றிகள் மிகவும் சோம்பலாகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இரண்டு வகையான பன்றிகளையும் ஆராய்ந்த ஆய்வாளர்கள் - இத்தகைய முடிவை எடுத்திருக்கிறார்கள். மத்திய ஐரோப்பா மற்றும் இத்தாலி, வட இந்தியா, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளில் காணப்படுகின்ற பன்றிகள் மிகவும் சோம்பலாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. முதல் தடவையாக பன்றியினங்களை வளர்க்கத் தொடங்கிய நாடு சீனாவாகும். அதன் பிறகு துருக்கியிலும் பன்றியினங்கள் வளர்க்கப்பட்டு வந்தன. ஆரம்பத்தில் பன்றிகள் பண்ணைகளில் இறைச்சிக்கு மட்டுமே வளர்க்கப்பட்டு வந்தன. பின்பு எண்ணெய் வகைகளும் இவற்றிலிருந்தே தயாரிக்கப்பட்டன. உலகளாவிய ரீதியில் பன்றியினங்களுக்கான கிராக்கி தற்போது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. காட்டிலுள்ள பன்றிகளைப் பிடித்துக்கொண்டுவந்து, பண்ணைகளை உருவாக்கி அங்கே பன்றிகளை வைத்து பெரியளவிலான தொழிலை ஆரம்பித்திருக்கின்ற பண்ணையாளர்களுக்கு பன்றிகளின் சோம்பல் ஒரு பயத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

# ஆபத்தாக மாறிவரும் சூரியக் குளியல்

18 வயதுக்குட்பட்ட இளைஞர் - யுவதிகள் சூரிய வெப்பத்தில் குளிர்காய்வதைத் தவிர்க்குமாறு - உலக சுகாதார ஸ்தாபனம் மேற்கத்தைய நாட்டு இளையவர்களிடம் விடுத்த வேண்டுகோளில் கேட்டுக்கொண்டுள்ளது.



சூரியனின் புற ஊதாக்கதிர் - தோல் புற்றுநோய்க்கு வழிவகுக்கும் என்பதே இதற்குக் காரணமாகும்.

உலகம் முழுவதும் வருடாந்தம் இத்தகைய தோல் புற்றுநோய்க்கு ஒரு லட்சத்து 32 ஆயிரம் பேர் பாதிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.


தற்போது மேற்கு நாடுகளில் செயற்கை முறையிலான சூரியக்குளியல் (Sun Bed) பிரபலமாகியுள்ளது. இதுவும் ஓர் ஆபத்தான விடயமே என, உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது. இங்கு வெளியாகும் புற ஊதாக்கதிர்த் தாக்கம் சூரியனின் மதியநேரக் கதிரின் தாக்கத்தைவிட, மிக அதிகம் என எச்சரிக்கப்படுகிறது. அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, வட அமெரிக்கா, வட ஐரோப்பா ஆகிய பகுதிகளில் தோல் புற்றுநோய்த் தாக்கம் அதிகரித்துவருகிறது. 66 ஆயிரம் பேர் ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதும் இந்த நோய்க்கு பலியாகின்றனர். நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் தோல் புற்றுநோய்த் தாக்கத்தின் அளவு கடந்த 45 வருடங்களில் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அமெரிக்காவில் கடந்த 30 வருடங்களில் இரு மடங்காகியுள்ளது.

# குடி தரும் உற்சாகம்

சிலர் அல்ககோல் குடிக்கும் பொழுது தங்களுக்கு அபரீதமான சக்தி கிடைப்பதாகக் கருதுகிறார்கள். சிலர் சிகரட் பிடித்தால் தான் மூளை வேலை செய்கிறது என்கிறார்கள். ஆனால் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக ஆய்வாளர்களின் கருத்துப்படி, இது மிகவும் தவறானது. மக்கள் பாரம்பரியமாக இப்படியான மூட நம்பிக்கைகளில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றனர். ஏறக்குறைய ஆயிரம் மக்கள் ஆய்வுக்காக எடுக்கப்பட்டபோது, அவர்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் அல்கஹோலைப் பருகும்போது, போதையுடன் மிகவும் உற்சாகம் வருவதாகக் கூறுகிறார்கள். ஆனால் இதனைப் பற்றி முற்றுமுழுதாக ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள் - அல்கஹோலில் ஒரு வகையான உணர்ச்சியைத் தூண்டும் சக்தி இருக்கிறது. அது எமது உடலில் காணப்படுகின்ற வித்தியாசமான டி.ஆர் டி 2 என்ற நிறமூர்த்தம் ஆனது, இத்தகைய அல்கஹோலால்தூண்டப்படுகிறது. இது - உடல் சமநிலையைக் குழப்பிவிட்டு, குடிகாரர்கள் புலம்புவதற்குக் காரணமாவதாக விஞ்ஞானிகளால் கூறப்படுகிறது.



# மறையும் சூரிய கலங்கள்



ஐரோப்பிய நாடுகளில் சூரிய சக்தியை உருவாக்கக்கூடிய கலங்களின் பாவனை கடந்தசில வருடங்களாக அதிகரித்துக் கொண்டு வந்தது. ஆனால் இப்போது சடுதியாக இவற்றின் விற்பனை குறைந்துகொண்டு வருகிறது. சோலர் கலங்களை உற்பத்திசெய்யும் கம்பனிகள் - பெரிய எடுப்பில் திட்டங்களைப் போட்டு, 2006 ஆம் ஆண்டு வரை உற்பத்திகளை அதிகரிக்க எண்ணியிருந்தது. ஆனால் இவற்றின் வாயில் மண் விழுவதுபோல இவற்றின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் அரச அங்கீகாரத்தில் ஆரம்பமான இந்தத் தொழிலில் ஏன் வீழ்ச்சி எனத் தொழில் நுட்பவியலாளர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். சூழல் மாசடைதலைத் தடுக்கின்ற இந்தச் சூரிய கலங்கள் மிகவும் சக்தி குறைந்த காரணத்தால்தான் மக்கள் இதனை விரும்பவில்லை என்ற கருத்தும் இருக்கிறது. இந்த உற்பத்திகளின் அங்கீகாரம் 2012 ஆம் ஆண்டுவரை இருப்பதால், இந்த உற்பத்தித் தடை வந்து மிகவும் பாரிய பொருளாதார வீழ்ச்சியை ஐரோப்பிய நாடுகளில் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சூரிய கலங்களினுடைய தொழில்நுட்பத் திறனை அதிகரிக்கவேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# சிக்கலில் கணினி மென்பொருள் கம்பனிகள்



சர்வதேச அளவில் இன்ரநெட் மூலம் கணினிமென்பொருட்களைத் திருடி விற்பனை செய்த இருவர் மாட்டியிருக்கிறார்கள். இவர்களைப் பிடிப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு - யுஎஸ்லெட் ஒப்பரேசன் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இதே போல 2001 ஆம் ஆண்டிலும் பிரித்தானியாவில் 8 பேர் பிடிபட்டிருந்தார்கள். பிடிக்கப்பட்டவர்களைவிட, ஏராளமானவர்கள் இத்தகைய தொழிலைச் செய்வதாகவும் கூறப்படுகிறது. உண்மையில் இதுஒரு பெரிய தொழில். அத்துடன் கோடிக் கணக்கில் இருந்த இடத்திலிருந்து உழைக்கக்கூடிய ஒரு தொழிலாகவும் இது கூறப்படுகிறது. பெரிய கம்பனிகளிலிருந்து பில்லியன் டொலர்கள் பெறுமதியுள்ள கேம்ஸ்.மியூசிக் மற்றும் விடியோ கணினி மென்பொருட்களைத் திருடி உடனடியாக இன்ரநெட் மூலம் ஆங்காங்கே கடத்துவதனால், குறைந்த மூலதனத்தில் நிறைய உழைக்கக் கூடியதாக இருக்கிறது. இத்தகைய தொழிலைச் செய்யும் கும்பலை மேற்குலகத்தில் டி ஓடி என்று அழைக்கிறார்கள். இவர்களால் சொவ்வேயர் கம்பனிகளை இழுத்து மூடும் அபாயம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# சீனாவின் நிலக்கரி பயன்பாடு உலகிற்கு ஆபத்தாகிறது



சீனாவில் அதிகரித்துவரும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய அதிக நிலக்கரி எரிக்கப்படுவதால், ஓசோன் படைக்கு ஆபத்து ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் மின்தேவை 80 சதவீதம் நிலக்கரியை நம்பியே உள்ளது. தற்போது மேலும் 544 புதிய நிலக்கரியின் உற்பத்தி நிலையங்களை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

நிலக்கரி எரியும்போது தோன்றும் காபனீரொட்சைட் பூமியின் வெப்பநிலையை அதிகரிக்கச்செய்யும் காரணிகளில் ஒன்றாகும். இதைவிட, தற்போது நிலக்கரிப் பாவனையை அதிகரிக்க சீனாவின் நிலக்கரிச் சுரங்க விபத்துக்களிலும் அநேக மனித உயிர்கள் பலியாகி வருகின்றன. அண்மையில் 214 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் - சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் பலியானது தெரிந்ததே. கடந்த ஆண்டு - நாளுக்கு 20 உயிர்கள் என்ற வகையில் 6 ஆயிரம் பேர் சீனாவின் நிலக்கரிச் சுரங்கங்களினுள் பலியாகியிருக்கின்றனர்.

# திரை விமர்சனம்

## மாயாவி



பிதாமகனில் சூர்யா நடித்த பாத்திரத்தை வைத்து ஒரே மாதிரி வடிவமைத்து, மாயாவியாக வெளியிட்டிருக்கிறார் இயக்குநர் சிங்கப் புலி.

டூரிஸ்ட் கைட்டான சூர்யா - சில தில்லு முல்லுகளும் செய்து பணம் சம்பாதிக்கிறார்.

இவருடைய கூட்டாளியாக சத்யன் நடித்திருக்கிறார். இருவரும் ஜோதிகா வீட்டில் திருடப் புகுந்து மாட்டிக் கொள்கிறார்கள்.

தன்னைப் பொலிஸில் மாட்டிவிட்ட ஜோதிகாவைப் பழி வாங்க நினைத்து, அவரைக் கடத்துகிறார். அதன் பிறகு என்ன நடைபெறுகிறது என்பது தான் மீதிக்கதை.

சூர்யாவும் சில ''பஞ்ச்'' வசனங்களை அடுக்கடுக்காகப் பேசி ரம்பம் மாதிரி அறுக்கிறார். சூர்யாவுடன் சேர்ந்து சத்யனின் நகைச்சுவை மிகவும் நன்றாக உள்ளது.

படத்தில் உண்மையாகவே நடிகையாக வரும் ஜோதிகாவுக்குச் சில நகைச்சுவை வசனங்கள் மூலம் ஒரு போடு போடுகிறார் சத்யன். தேவி பிரசாத்தின் பின்னணி இசையின் பாடல்களும் மற்றும் மெல்லிய இசையும் படத்துக்கேற்றபடி உள்ளன.

புஷ்பவனம் குப்புச் சாமி பாடுகின்ற ஒரு பாடல் இளையோரைத் தாளம் போட வைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒளிப்பதிவாளர் ரத்னவேலின் ஒளிப்பதிவு வித்தையில் படத்தின் கதை மறந்து, கண்களுக்கு விருந்து கிடைக்கிறது.


படத்தின் முன்பாதியில் நகைச்சுவை. இரண்டாம் பாதி சப் என்று இருக்கிறது.

“மாயாவி” பின்பாதி “நித்திரை”.

– மேரி–

# உடல் நிலை அறிய எவரெஸ்ட் ஏறும் குழு

உயரமான பகுதிகளில் மனிதர்களின் உடல் நிலை எவ்வாறு இருக்கும் என்பதைப் பரிசோதனை செய்வதற்காக மருத்துவ குழுவொன்று எவரெஸ்ட் மலையின் உச்சிக்கு ஏறியுள்ளது. இங்கு செய்யப்படும் சோதனைகள் மூலம் கடும் நோயாளிகளுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள் கண்டுபிடிக்கப்படும் என பீ.பி.சி தொலைக்காட்சியின் மருத்துவப் பிரிவு தயாரிப்பாளர் சுட்டிக் காட்டுகின்றார்.



1978 இல் Reinhold Messner மற்றும் Peter Habeler என்ற இருவர் ஒட்சிசன் கலன் இன்றி எவரெஸ்ட்டில் ஏறிய முதல் மனிதர்கள் என்ற பெருமை பெற்றவர்களாவர். எனினும் இவர்கள் மலை உச்சியை அண்மிக்கும் போது, போதிய ஒட்சிசன் இன்றி ஒவ்வொரு காலடியும் வைக்கும் போது சிரமப்பட்டனர். இது அவசர சிகிச்சைப் பிரிவில் ஒட்சிசன் இன்றி நோயாளி இறுதி நேரத்தில் நடத்தும் போராட்டத்தை ஒத்திருந்ததாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஒட்சிசன் குறையும்போது நுரையீரல் திரவங்களால் நிரப்பப்படுவதும், மூளை செயலிழப்பதும், மயக்கநிலை ஏற்பட்டு, இறுதியில் இறப்பு ஏற்படுவதும் வழமை. இதே நிலமை மலை போன்ற உயரமான பகுதிகளிலும் ஏற்படும் .

இந்த மலையேறும் குழுவினர் - மலையேறும் போதே தமது குருதியில் உள்ள ஒட்சிசன் அளவு, சுவாசிக்கும் வேகம், மூளை செயற்படும் தன்மை, நுரையீரல் செயற்பாடு என்பவற்றை ஆராய்வர்.

# வெயிலிலும் பச்சை



உலகளாவிய ரீதியில் வெப்பநிலை சடுதியாக அதிகரித்தல் காரணமாக- பச்சைத் தாவரங்களின் வளர்ச்சி மற் றும் அதனுடைய பச்சைத் தன்மை ஆகியவற்றுக்கு மிக இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஜரிஸ் நாட்டில் பல நாட்களுக்குப் பிறகு பச்சைப்பசேல் எனத் தாவரங்கள் காட்சி தருவதாகக் கூறப்படுகிறது. பெரும்பாலான தாவரப் பண்ணைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி, பச்சைத் தாவரங்கள் மிகவும் போஷாக்காக வளர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன் தாவரங்களினுடைய இப்படியான மாற்றங்களுக்குரிய காரணமாகச் செயற்கையாகக் கொடுக்கப்பட்ட போஷாக்கு மற்றும் நீர் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதேவேளை மிகவும் சிறப்பான முறையில் தாவரங்களைப் பராமரித்த பண்ணைகளைப் பார்க்கும்பொழுது, அவற்றினுடைய அற்புதமான சிறப்பான திட்டங்களும், செயற்பாடுகளும்தான் தாவரங்கள் இவ்வளவு வெப்பத்திலும் மிகவும் பச்சைப்பசேல் என இருப்பதற்குரிய அதிமுக்கிய காரணங்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

# சுண்டிக்குளம் கடல் நீரேரியில் இறால் பிடிக்கும் மீனவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

சுண்டிக்குளம் கடல் நீர் ஏரியில் டிஸ்கோ வலை (முப்புரி வலை) கூட்டுவலை, வீச்சுவலை மூலம் இறால் பிடித்தல் தொடர்பான கலந்துரையாடல் - நாளை காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சுண்டிக்குளம் கடல் நீர் ஏரியில் இறால் பிடித்தல் தொடர்பாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச எல்லைக்குட்பட்ட தொழிலாளர்களுக்கும், கரைச்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச எல்லைக்குட்பட்ட தொழிலாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட தொழில் சம்பந்தமான பிரச்சினைகள் - வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறையினரதும், சமாசத்தினரதும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, இறால் பிடித்தல் தொடர்பான இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு இரு பிரதேச எல்லைக்குட்பட்ட சங்கங்களினதும், சமாசங்களினதும் பிரதிநிதிகள், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறையினர், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறையினர் ஆகியோருக்கு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அழைப்பு விடுத்துள்ளது. (21)

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் 17 இடைத்தங்கல் முகாம்கள்

(மாமுனை)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் - 17 இடங்களில் இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

இதில் மாமுனை பிரதேசத்தில் 121 குடும்பங்களுக்கும், செம்பியன்பற்று வடக்கு பிரதேசத்தில் 115 குடும்பங்களுக்கும், மருதங்கேணி வடக்குப் பிரதேசத்தில் 120 குடும்பங்களுக்கும், தாளையடிப் பிரதேசத்தில் 80 குடும்பங்களுக்கும், அரசடி வீதியில் 139 குடும்பங்களுக்கும், வாரிவிட்டான் வீதியில் 110 குடும்பங்களுக்கும், உடுத்துறை 9 ஆம் 10 ஆம் வட்டாரங்களில் 275 குடும்பங்களுக்கும், கொடுக்கிளாயில் 228 குடும்பங்களுக்கும், இடைக்கால பாடசாலை வீதியில் 202 குடும்பங்களுக்கும் -

விநாயகபுரம் பிரதேசத்தில் 200 குடும்பங்களுக்கும், நித்தியவெட்டைப் பிரதேசத்தில் 110 குடும்பங்களுக்கும், கட்டைக்காட்டு பிரதேசத்தில் 95 குடும்பங்களுக்கும், கேவில் பிரதேசத்தில் 30 குடும்பங்களுக்கும், சுண்டிக்குளம் -கல்லாறு பிரதேசத்தில் 250 குடும்பங்களுக்குமான இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

## தாளையடி பாடசாலை புதிய இடத்தில்

தாளைடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை - நேற்று தொடக்கம் புதிய கட்டடத்தில் இயங்குகிறது.

சுனாமி கடல் அனர்த்தத்தால் முற்றாகச் சேதமடைந்த இந்தப் பாடசாலை, இவ்வளவு நாட்களும் மருதங்கேணியிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் இயங்கி வந்தது.

தற்போது தாளையடியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில், பொதுமக்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகையில் நேற்று தொடக்கம் இயங்கிவருகிறது. (21)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் அரச சார்பற்ற நிறுவன பணியாளருக்கான பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில், அகதிகளுக்கான நோர்வே அமைப்பால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் முகாம் பராமரிப்பில் ஈடுபட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கான ஆறு நாட்கள் உள்ளிட்ட முகாம் முகாமைத்துவப் பயிற்சிநெறியொன்று நடத்தப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சி நெறி - கடந்த புதன்கிழமை கிளிநொச்சி வெண்புறா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிநெறியில் சுனாமி கடற்கொந்தளிப்பில் பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து முகாம்களிலுள்ள மக்களின் பராமரிப்பில் பங்கேற்றுள்ள நிறுவனங்களைச் சேர்ந்த 20 பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சி நெறி நோர்வே அமைப்பைச் சேர்ந்த ஜெனிபர் கிறின் கிவெஸ்மோ, கிளிப்கொப் பிரிட்ஸ் ஆகியோரால் அளிக்கப்பட்டன.

# வர்த்தகர்கள், வைப்பக வாடிக்கையாளர்களுக்கான கலந்துரையாடல் முல்லைத்தீவில் நடைபெற்றது

முல்லைத்தீவு மாவட்ட வர்த்தகர்கள், தமிழீழ வைப்பக வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை விசுவமடு மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தமிழீழ வைப்பகத்தின் ஆளுகை மேலாளர் பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வைப்பகக்கடன் வழங்குதல், தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகள் பற்றி விரிவுபடுத்தப்பட்டது.

இதில் மக்களின் கேள்விகளுக்கு தமிழீழ வைப்பகத்தின் மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவன் பதிலளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தர்மபுரம், விஸ்வமடு, றெட்பானா, உடையார்கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீ ராமகிருஸ்ண சேவா நிறுவனத்தின் தொண்டர்களால் சத்துணவு வழங்கல்

குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்திவிழா நிகழ்வுகளையொட்டி, சுனாமி கடல் அனர்த்த நிவாரணப் பணிகள் நேற்றுமுன்தினம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெற்றன.

சுனாமி கடல் அனர்த்தத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு- செம்பியன் பற்று வடக்கு, மாமுனை இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கு சமபோஷ ஊட்டச்சத்து ஆகாரம், பால்மா பைக்கற்றுகள் ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரம தொண்டர்களால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்துகொண்டார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் ஏற்பாட்டில் சுனாமி கடல் அனர்த்த நிவாரணப் பணிகள் நடைபெற்றன. (21)

## சிறுவர் பூங்கா திறப்பு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சிறுவர் கல்வி ஊட்டல் மேம்பாட்டுப் பணி, ஊரக வளர்ச்சிப் பணியினரால் கிளிநொச்சி அம்பாள்குளம் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள உமா சிறுவர் பூங்கா - நேற்று பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

# கோட்ட மட்ட உடற்கல்வி போட்டி பரந்தன் மகா வித்தியாலயத்தில்

(கிளிநொச்சி )

கிளிநொச்சி கோட்ட உடற்பயிற்சிப் போட்டி - பரந்தன் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வு - கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட வைத்திய நிபுணர் யூடி ரமேஷ் ஜெயக்குமார் கலந்துகொண்டார்.

இந்தப் போட்டியில் கரைச்சிப் பிரதேசம், கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கோட்டங்களிலிருந்து - தலா இரண்டு பாடசாலைகள் வீதம் பங்குபற்றின.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட வைத்திய நிபுணர் யூடி ரமேஷ் ஜெயக்குமார் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரை உதவிக் கல்விப் பணிப்பாளரும் உடற்கல்விச் செயலாளருமான பாலகெங்காதரன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் குகராசா ஏற்றி வைத்தார்.

கோட்ட மட்டக் கொடிகள் அந்தந்தக் கோட்ட அதிகாரிகளால் ஏற்றி வைக்கப்பட்டன.

கண்டாவளைக் கோட்டக் கொடியை கண்டாவளை கோட்ட அதிகாரி இராசகுலசிங்கம் ஏற்றி வைத்தார்.

பூநகரிக் கோட்டக் கொடியை பூநகரி கோட்ட அதிகாரி கணபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார். பளை கோட்டக் கொடியை குணபாலசிங்கம் ஏற்றிவைத்தார்.

இந்தப் போட்டியில் 7 ஆண்கள் குழுக்களும், 8 பெண்கள் குழுக்களுமாக 15 குழுக்கள் பங்குபற்றின.

இதில் பெண்கள் அணியில் முதலாம் இடத்தை இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், இரண்டாம் இடத்தை இராமநாதன் மகா வித்தியாலயமும் பெற்றன.

ஆண்கள் அணியில் முதலாவது இடத்தை முழங்காவில் மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை உருத்திரபுரம் மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

(க)



## தையல்பயிற்சியின் சான்றிதழ் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு -ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பண்டாரவன்னியன் இளைஞர் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட தையல் பயிற்சிகளை முடித்துக் கொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு - கடந்த வியாழக்கிழமை கற்சிலைமடு தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் மன்ற அதிகாரி சண்முகவடிவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் சுபாஜினி ஏற்றிவைக்க, தொடர்ந்து சிறப்புரைகள், கருத்துரைகள் இடம் பெற்றன.

இதில் பயிற்சிபெற்ற 17 யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## முன்பள்ளிகள், பொதுமண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கில் 4 முன்பள்ளிகளும், 4 பொது மண்டபங்களும் அமைக்கப்படவுள்ளன.

ஏ.எஸ்.பி நிறுவனத்தின் உதவியுடன் வத்திராயன் வடக்கில் 2 முன்பள்ளிகளும், மருதங்கேணியில் ஒரு முன்பள்ளியும், தாளையடியில் ஒரு முன்பள்ளியும் 5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, வத்திராயன் பிரதேசத்தில் 2 பொது மண்டபங்களும், மருதங்கேணியில் ஒரு பொது மண்டபமும், தாளையடி பிரதேசத்தில் ஒரு பொது மண்டபமும் 8 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் 22

1895 : அகஸ்டி லூமியர், ஜுன் லூமியர் சகோதரர்களால் முதன் முதல் சினிமா பாரிசில் திரையிட்டுக் காட்டப்பட்டது.

1904 : படத்துடன் செய்திகள் செய்தித் தாள்களில் பிரசுரமாகின. லண்டனில் இருந்து வெளிவரும் டெய்லி இலஸ் ரேட்டட் மெயில் என்ற தினசரியே இவ்வாறு படத்துடன் செய்தி வெளியிட்ட பத்திரிகையாகும்.

1907 : இந்தியாவில் இருந்து குடியேறி வருபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கென தென்னாபிரிக்கா "ஆசியர்கள் பதிவுச் சட்டத்தை" நிறைவேற்றியது.

1917 : ரஷ்யாவின் புதிய புரட்சி அரசை முதலாவது நாடாக அமெரிக்கா அங்கீகரித்தது.

1918 : அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் "யர்ரா" நதிக்கரையின் ஒரு சிகரத்தின் 61.75 மீற்றர் உயரத்திலிருந்து அலெக்ஸ்விக்ஹாம் என்பவர் குதித்து நீந்திச் சென்று சாதனைபடைத்தார.

1919 : பாரிஸுக்கும், பிரான்ஸுக்கும் இடையே பயணிகள் விமானப் போக்குவரத்து ஃபார்மன் சகோதரர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.

1926 : லண்டன் தெருக்களில் வெள்ளை வர்ணத்தில் திசைகாட்டும் அம்புக்குறிகள் முதன் முதல் போடப்பட்டன.

1935 : அரச ஆணைப்படி பெர்ஷியா தனது பெயரை ஈரான் என மாற்றிக்கொண்டது.

1945 : அரபு நாடுகளிடையே கூட்டுறவை வளர்ப்பதற்காக, டுனிஷியாவின் டுனிஸ் என்ற இடத்தில் தலைமையத்தைக் கொண்டதாக "அரபு லீக்" என்ற அமைப்பு உருவாகியது.

1981 : ரஷ்யாவின் சோயூஸ் - 39 என்ற விண்கலம் வான்நோக்கிச் செலுத்தப்பட்டது.

1982 : 192 மணித்தியாலங்கள் விண்ணில் பறந்து 128 தடவைகள் பூமியை வலம் வந்த, அமெரிக்க விண்வெளி ஓடமான கொலம்பியா எஸ்.டி.எஸ் - 3 விண்ணில் செலுத்தப்பட்டது.

சர்வதேச குடிநீர் தினம்

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.
திருக்குறள்

# நமது நோக்கு

## கதிர்காமரை மிஞ்சிய ஆனந்தசங்கரியார்

சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக பல்வேறுவகையிலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கான நிவாரணப் பணிகளை பக்கச் சார்பற்ற முறையில் நேர்மையாகவும், முழுமையாகவும் மேற்கொள்வதற்கென பொதுக்கட்டமைப் பொன்றினை அரசும் - புலிகளும் இணைந்து உருவாக்குவதற்கான முயற்சியில் நோர்வே அரசின் உதவியுடன் இருதரப்பினரும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், இக்கட்டமைப்பொன்றின் உருவாக்கத்தின் அவசியம் பலதரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வரும் சூழலில், கடந்த பொதுத்தேர்தலில் தமிழினவிரோத சக்திகளின் கைப்பொம்மையாகி இயங்கி, போட்டியிட்டு மக்களால் முற்றிலும் நிராகரிக்கப்பட்ட மனிதராக விரட்டப்பட்ட ஆனந்தசங்கரியார் - சிங்களப் பத்திரிகை யொன்றிற்கு வழங்கிய கருத்து அவரின் சுயத்தை இழந்துவிட்ட நிலையை உறுதி செய்வதாகவே உள்ளது.

அதாவது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டிய அவசியம் அரசுக்கில்லை என அவர் தன் அறளைக் கருத்தை அப்பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல - நிவாரணப்பணிகளை மேற்கொள்ளவென உருவாக்கத்திட்டமிடப்பட்டுவரும் பொதுக்கட்டமைப்பினால் எந்த விதமான பயனும் இல்லையெனவும் அவர் அப்பத்திரிகைப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கே ஆனந்த சங்கரியாரின் அர்த்தமற்ற புலம்பல்களையெல்லாம் எவரும் கவனத்தில் கொள்ளப் போவதில்லை. அப்படி எவராவது ஓரிருவர் கருத்தில் எடுத்தாலும், பாவம் அவர்கள் அன்னாரது சுயஅறிவுத் தளம்பல் நிலையை அறியாத அப்பாவிகளாகவே இருப்பர்.

ஆனாலும், அவரது பிதற்றல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரம் செய்யும் தென்பகுதி சிங்கள ஏடுகள் - அவரது பலவீனத்தைப் புரிந்து கொண்டு அவரை தமிழர்களுக்கும் அவர்களின் விடுதலைப்போராட்டத்திற்கும் எதிரான பிரசாரங்களை மேற்கொள்ள ஒரு வெறும் ஒலிபெருக்கிக் குழாயாக பாவிப்பதை புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவரது நிலை அவமானத்துக்குரிய ஒன்றாகிவிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் என்று தன்னைச் சுயதம்பட்டம் அடித்துக் கொள்பவர் தமிழ்மககளின் - அதுவும் கடற்கோள் அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான மக்களின் அவலங்களைப் போக்க, அவசியமான பொதுக்கட்டமைப்பொன்றின் உருவாக்கத்தைதான் முழுமையாக எதிர்ப்பதாகக் கூறுவது, அவரை ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளருக்கு இணையான பேரினவாத கருத்தாளராகவே எண்ண வைக்கிறதல்லவா.

சங்கரியார் இப்படி ஒரு இழிவான நிலைக்கு தன்னைத்தானே தள்ளியுள்ளமையானது - கடந்த தேர்தலில் அவருக்கு பரிதாபம் கருதி அல்லது செஞ்சோற்றுக்கடன் கருதி வாக்களித்த சொற்ப தமிழர்களையும் அவரை நோக்கிக் கேலியாகப் பார்க்க வைத்திருக்கிறதென்றே கூறவேண்டும்.

அரசு, புலிகள் அமைப்பிற்கு எந்தவிதமான உதவிகளையும் வழங்கவேண்டிய அவசியமில்லை என அலம்பியுள்ள சங்கரியார் - அழிவுகளின் போது அவர்களால் மக்களைக் காப்பாற்ற முடியவில்லையெனில், ஏன் அவர்கள் அந்த மக்களை நிர்வகிக்கவேண்டும் என சுத்த அறிவிலித்தனமாகப் பிதற்றியுமுள்ளார்.

சுனாமி அனர்த்தம் நடந்த சில நிமிடநேரத்திலேயே வடக்கு- கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி செய்து மீட்புப் பணிகளை மேற்கொண்டு, பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து, தேவையான அனைத்தையும் செய்தவர்கள் விடுதலைப் புலிகளும் ஏனைய எங்கள் மக்களுமே தான் ... அரசல்ல என்பதை இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஒண்டி ஒதுங்கி உல்லாசமாகப் பவனிவரும் சங்கரியாருக்கு எங்கே தெரியப்போகிறது?

ஒருமனிதன் எவ்வளவுதான் துன்பங்களும், தோல்விகளும் வந்தாலும் கொள்கையை, இலட்சியத்தை இழக்கக்கூடாது. எதிரிகளுக்கும், அயலவர்களுக்கும் அற்ப சலுகைகளுக்காக அடகு வைக்கக்கூடாது.


அப்படிச் செய்பவன் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புக்கே சமனானவன்.

மக்களால் தூக்கியெறியப்பட்ட அவர் மக்கள் ஏன் தன்னைத்தூக்கி எறிந்தார்கள் என்று சிந்திப்பதை விட்டு, மக்களைத் தூக்கியெறியத் தலைப்பட்டுள்ளமையானது, ஒரு எதிரியைவிடவும் மோசமான துரோகியாக அவரை அடையாளப்படுத்த வைத்துள்ளது.

பாவம் கதிர்காமர், இப்போது அவருக்குப் போட்டியாக ஆனந்தசங்கரியார் தன்னினத்தைக் காட்டிக் கொடுக்கும் அரச விசுவாசியாக மாறத்தொடங்கிவிட்டார்.

விரைவில் அவர் அரசுக்கோ, ஜே.வி.பியின் சோமவன்ச அமரசிங்கவுக்கோ, அல்லது ஹெல உறுமய பிக்குகளுக்கோ ஆலோசகராக மாறி, தமிழ்த் தேசியத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்தாலும் ஆச்சரியமில்லை...

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அரசின் செவிகளில் விழாத குரல் ஐ.நாவில் எதிரொலித்திருக்கிறது!

இந்தவாரம் அரசாங்கத்துக்கு நல்ல செய்திகளாக இல்லை என்று சொல்லிக்கொண்டே வந்தார் பரமசிவம்.

எந்தவாரம்தான் அதற்கு நல்ல செய்திகளாக இருந்தது. இந்த வாரத்தை மட்டும் சொல்கிறீரே எதைச் சொல்கிறீர் என்று கேட்டேன்.

முதலில் வந்த செய்தி. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழ முடியும் என்ற நம்பிக்கையைத் தமிழர்கள் இழந்துவிட்டனர். எனவே அவர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தக்கூடிய நிலை தோன்றக்கூடும் என்று சொன்னார் பரமசிவம்.

மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேச நிதியத்தின் பொதுச்செயலாளர் வெரினா விபராப் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுகையில் தெரிவித்திருப்பதைத்தானே சொல்கிறீர் என்று கேட்டேன் நான்.

ஐக்கிய இலங்கைக்குள் வாழமுடியாது என்ற நிலை இலங்கை விடுதலை பெற்ற அடுத்த ஆண்டிலேயே துலாம்பரமாகத் தெரிந்துவிட்டது. என்றாலும் தமிழர் தலைவர்களை அரவணைத்து ஆட்சியைச் சமாளித்தார் முதல் பிரதமரான டி.எஸ்.சேநாயக்க. ஆனாலும் உணவில் தன்னிறைவு என்று சொல்லி தமிழ்ப்பிரதேசத்தை சிங்கள மயமாக்கும் அவரது கபடத்தனத்தை அறிந்துகொண்ட தந்தை செல்வா தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு வேண்டுமென்று குரல் கொடுத்தார். இதைச் சிங்கள ஆதிக்க சக்திகள் நாட்டைப் பிரிக்க முயற்சி என்று எதிர்த்தன.

நம்மவர்களோ தமிழ் மக்களை ஒரு மூலைக்குள் முடக்கும் செயல் என்று எதிர்த்தனர். அன்று தொடங்கி தமிழர்கள்மீது சிங்கள ஆதிக்கம் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளை எடுத்தது. நம்மவர்களின் குரல்களையும் தமக்குச் சாதமாக்கிச் செயற்பட்டது. தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியிலும், சாத்வீக முறையிலும் சிங்கள ஆதிக்கத்துக்கெதிராகப் போராடி பின்னர் இப்போது ஆயுதப் போராட்டமாக முகிழ்த்து பெருமளவு முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இன்றும் நம்மவர் சிலர் சிங்கள ஆதிக்க சக்திகளுக்கு வாய்ப்பாகவே குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றார் பரமசிவம்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் காலங்கடந்த நிலையிலும் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் இனியும் வாழமுடியும் என்ற நம்பிக்கையை தமிழர்கள் இழந்துவிட்டனர் என்று உலக அரங்காகிய ஐ.நா.விலேயே மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேச அமைப்பின் செயலாளர் குரல் கொடுத்திருக்கிறார். தமிழ் மக்களின் போராட்டங்கள் வெற்றிபெறத் தொடங்கிவிட்டது என்றேன்.

நாங்கள் மக்களுக்கிடையில் பாகுபாடு காட்டவில்லையென்றும் இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லையென்றும் இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினைதானிருக்கிறதென்றும் உலகிலுள்ள நாடுகளுக்கெல்லாம் சென்று பிரசாரம் செய்துவந்த கதிர்காமருக்கும் அம்மையாருக்கும் அவர்களது எடுபிடிகளுக்கும் சரியான சாட்டையடி விழுந்திருக்கிறது.

தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று சுனாமிப் பேரழிவின்பின் இலங்கை அரசு நடந்துகொள்ளும் போக்குப் பற்றி எடுத்துச் சொல்கிறார்கள். இந்தக் கதிர்காமரும் லண்டன் போனார். வேறுசில நாடுகளுக்கும் சென்றார். சிறுவர்களைப் புலிகள் படையில் சேர்ப்பது பற்றியும் சொன்னார். புலிகளுக்கெதிராக வழமைபோல் குற்றம் சுமத்தினார். கொழும்பிலுள்ள ஊடகங்கள் கதிர்காமரின் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து எழுதின. தமிழ்ச்செல்வன் குழுவினரின் முயற்சிகளை கதிர்காமர் முறியடித்துவிட்டாரென்றும் இந்த ஊடகங்கள் விளாசித் தள்ளின என்று பரமசிவம் தொடர்ந்து சொன்னார்.

ஆனால் கதிர்காமரின் சாதுர்யம், சாமர்த்தியம் எல்லாம் மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான அமைப்பின் செயலாளர் கூறிய கருத்து அடித்து நொருக்கி இலங்கை அரசைக் குற்றவாளிக் கூண்டிலல்லவா நிறுத்தியிருக்கிறது என்றேன்.

உள்நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தங்கள் இடங்களில் போய்க்குடியேறமுடியாதவாறு அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலும் மற்றும் இடங்களிலும் படைகள் நிலைகொண்டுள்ளன. இந்த இடங்களிலிருந்து படைகள் வெளியேற வேண்டுமென எப்படியெப்படியெல்லாம் மக்கள் அமைதியாகக் கோரிக்கை விடுத்தனர். இந்த மக்கள் மீளக்குடியமரவும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும் அவர்களின் வாழ்விடங்களைப் புனரமைக்கவும்தான் இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை அமைக்கப்படவேண்டுமென்று விடுதலைப் புலிகள் கோரினார். அதைப்பற்றிப் பேசுவதற்கே சந்திரிகா அம்மையாரின் அரசு இன்னமும் முன்வரவில்லை. எங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறுங்கள். நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள் என்று மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர் என்றார் பரமசிவம்.

மக்களின் இந்தக் கோரிக்கைக் குரல் இங்குள்ள ஆட்சியாளர்களின் காதில் விழவில்லை. ஆட்சியாளாகளுடன் அண்டிப் பிழைக்கும் நம்மவர்கள்கூட அதைப்பற்றிப் பொருட்படுத்தவில்லை. ஆனால் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள ஐ.நா அரங்கில் நம் மக்களுக்காக குரல் ஒலித்திருக்கிறது. நம் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களும் வீண் போகவில்லை என்றேன்.

எங்கள் போராட்டங்களும் எங்கள் தலைமையின் சாதுர்யமும், வீரமும், தியாகமும் வீண்போகவில்லை. உலகம் உண்மையை உணரத் தொடங்கிவிட்டது என்றார் பரமசிவம்.

இது ஒரு செய்தி சரி. அரசுக்கு நல்லதாக இல்லாத வேறு செய்திகள் இருப்பதாகச் சொன்னீரே அடுத்த செய்தி என்ன? என்றேன்.

கோடரிக்காம்பாக மாறியவருக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. இது அவர்களின் உள் வீட்டுப் பிரச்சினை என்று அரசாங்கமும் படைத்தரப்பும் சொல்லிவந்தது. புலனாய்வுத் துறை மீது புலிகள் வீண் பழி சுமத்துகிறார்கள். படையினர்தான் அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதாக குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதே தெரியாது என்று படைத்தரப்பு சொல்லிவந்தது.

சமீபத்தில் கௌசல்யனும் அவரோடு வந்தவர்களும் வெலிக்கந்தைக்கருகில் வழிமறித்துக் கொல்லப்பட்டபோது புலனாய்வுப் பிரிவுக்கும் இராணுவ முகாம்களுக்கு சமீபத்திலும் இச்சம்பவம் நடந்ததால் படைத்தரப்புக்கு தெரியாமல் இது நடைபெற்றிருக்க முடியாது என்ற கருத்து வெளிவந்தது.

இந்தச் சம்பவத்தில் படைத்தரப்பும் புலனாய்வுத் தரப்பும் இதைமறுத்தது. இதே சமயம் இது உள்வீட்டு வேலை என்று தமிழ் அமைச்சரும் அவரது ஏடும் திசைதிருப்பும் முறையில் கருத்து வெளியிட்டிருந்தனர். இப்பொழுது கருணா குழுவினர் பொலநறுவை மாவட்டத்தில் தீவுச்சேனை என்ற இடத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் அரச படைகள் நிலைகொண்டிருக்கும் இடத்தில் இயங்கிவருகிறார்கள் என்பதை சண்டே லீடர் என்ற ஆங்கில வார இதழ் புகைப்படத்துடன் தலைப்புச்செய்தியாக வெளியிட்டிருக்கின்றது.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற வடிவில் இந்தச் செய்தி விளக்கமாக வெளிவந்திருக்கிறது. சுமார் அறுபது பேர் இந்தக் குழுவில் இருப்பதாக தெரிகிறது. இந்தக் குழுவினர் அடாவடித்தனத்தில் இறங்கி அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களைக் கொலைசெய்திருக்கின்றனர். இதனால் அக்கிராம மக்களே போர்க்கொடி உயர்த்தியிருக்கிறனர். இவர்களை இக்கிராமத்திலிருந்து வெளியேறுமாறு கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர் என்றார் பரமசிவம்.

ஒண்டுவதற்குக் கிடைத்த இடத்திலும் ஒழுங்கா இருக்கத் தெரியவில்லை கிராம மக்களே எதிர்க்கத் தொடங்கிவிட்டால் இனி படை முகாம்களுக்குள் கைதிகளாகத்தான் இருக்க வேண்டிவரும் என்றேன்.

இப்பவும் பலர் இப்படித்தான் இருப்பார்கள் எப்படியோ கோடரிக்காம்புக்கும் அரசுக்கும் புலனாய்வுத்துறைக்கும் படைத்தரப்புக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. இன்னும் விபரங்கள் விரைவில் வெளிவரலாம் என்றார் பரமசிவம்.

இன்னொரு செய்தியும் உம்மிடம் இருக்குமேயென்றேன்.

இல்லாமலா? கனடாவில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்று கொழும்பிலிருந்து வெளிவரும் இனவாத ஊடகமும் இனவெறிக் கூச்சலிடுபவர்களும் பெரும் முயற்சி செய்து வந்தனர். கனடாப் பிரதமரைக் கூடக் கண்டனமும் செய்தனர். ஆனால் இப்போது புலிகளை கனடாவில் தடைசெய்யக் கூடாது என்று இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்நாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கேட்டிருக்கின்றார்களென்ற செய்தியும் வெளிவந்திருக்கின்றது. என்றார் பரமசிவம். இச்செய்திகள் யாவும் அம்மையாரின் அரசுக்கு மகிழ்ச்சி தரக் கூடியவையல்லவே என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் நண்பர்.

அரசியற் கட்டுரை...

# உண்மையை உணர்ந்த உலகமும் சினமடைந்த கதிர்காமரும்

சிலம்பு

சிலரைப் பல காலம் ஏமாற்றலாம், பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எந்தக் காலத்திலும் ஏமாற்ற முடியாது என்று கூறுவார்கள். ஆதிக்க வெறி கொண்டவர்களும், ஏகாதிபத்தியச் சிந்தனை கொண்டவர்களும் இந்தக் கூற்றை ஏற்பதில்லை அல்லது, இந்தக் கூற்றுத் தமக்குரியதல்ல என்றும் கருதுவார்கள்.

இதே எண்ணந்தான் சிங்களத்து அரசியல்வாதிகளிடம், ஆட்சியாளர்களிடம் ஊறிப்போனதாக இருக்கிறது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து நசுக்கிய சிங்களத்து ஆட்சியாளர்கள் உரிமை கேட்டுப் போராடிய மக்களைப் பயங்கரவாதிகள் என்று பரப்புரை செய்து வந்தனர். இதற்குச் சிங்கள ஆளும் வர்க்கம் பயன்படுத்திய நபர்கள் தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருந்தும் - இனப்பற்றுக் கிஞ்சிற்றும் இல்லாத கதிர்காமர் போன்றோரேயாகும்.

உலக நாடுகள் பலவற்றுக்கும் பறந்து திரிந்து பயங்கரவாதிகள், பயங்கரவாதிகள் என்று தமிழீழ விடுதலைப் போராளிகளைப் பற்றிப் பரப்புரை செய்து வந்தார் கதிர்காமர்.

சிங்கள ஆட்சிப் பீடம் வழங்கிய அமைச்சர் பதவியைத் தமிழ் மக்களுக்குகெதிரான பணிக்கு நன்கு பயன்படுத்திக் கொண்டார் அவர். சிங்கள ஆட்சிபீடம் மகிழ்ந்தது. சில நாடுகள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலிலிலும் சேர்த்தது. இவை 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர், சந்திரிகா ஆட்சியமைத்துச் சமாதானத்துக்காகச் சண்டை தொடங்கிய பின்னர் நடந்த நிகழ்வுகளாகும்.

உலக நாடுகள் உண்மையை உணரத் தலைப்பட்டதால், சிங்கள அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இதற்குப் பின்னர் தான் சிங்கள ஆட்சியாளர்களின் சாயம் வெளுக்கத் தொடங்கியது. உண்மையான சமாதான விரும்பிகள் யார்? சிங்களமா? தமிழீழமா? என்பதை உலகம் கண்டு கொள்ளத் தலைப்பட்டது.



இந்தத் தீவின் யதார்த்த நிலையை அனைத்து நாடுகளும் அறிய நேர்ந்தது. விடுதலைப் புலிகளை வெறுமனே பயங்கரவாதிகள் என்று எண்ணிய உலகம், விடுதலைப் போராளிகள், உரிமைப் போராட்டம்தான் அங்கு நடைபெறுகின்றதென்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

தமிழீழத்தின்பெரும் பகுதி சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தனியான ஆளுகைக்குள் இருப்பதும், மிகுதிப் பகுதி சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பில் இருப்பதும் அரசு புலிகள உடன்படிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதை உலகம் கண்டு கொண்டது. இதனை எதிர்த்துக் குரல் கொடுத்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கவிழ்த்த சந்திரிகாவும், தொடர்ந்து அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளமை யதார்த்த நிலைமையை மேலும் வலுவாக்கியுள்ளது. இத்தகைய நிலைமைகள் கதிர்காமரின் பயங்கரவாதப் பரப்புரையைக் கேள்விக்குறியாக்கியது மட்டுமல்ல, அது பொய் என்று உறுதிப்பாட்டையும் வெளிக்காட்டியுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு - உலக நாடுகளிடையே ஏற்பட்டுவருவதால், சீற்றம் கொண்டுள்ளவர்களில் ஜே.வி.பியும், கதிர்காமரும் முன்னிலை வகிக்கின்றனர். யாதார்த்த நிலையை விளங்கி - உலக வங்கியோ, ஐரோப்பிய யூனியனோ, ஐ.நா செயலாளர் நாயகமோ ஏதாவது கூறிவிட்டால் கொதித்து எழுகின்றனர் இவர்கள். இவர்களது ஏமாற்றுக்காலம் முடிவுக்கு வந்து விட்டதை இவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இத்தகையவர்களின் பரப்புரையைத் தோற்கடிப்பதில் புலிகளின் செயற்பாடுகள், தமிழீழ மக்களின் ஒற்றுமை என்பன காத்திரமான பங்கை வகித்தன. ஆனால் இதற்கும் அப்பால், இயற்கையின் சீற்றமான சுனாமியும் பாரிய உதவியைச் செய்துள்ளது எனபதே உண்மை நிலையாகும்.

சுனாமி, பேரழிவைச் சில மணித்தியாலங்களில் தந்தது. யுத்தத்தால் துன்புற்ற மக்களை மேலும் கொடுமைப்படுத்தியது சுனாமி. ஆனால் அந்த அழிவிலும் சில நன்மைகள் வெளிப்பட்டுள்ளன என்பது சற்று ஆறுதலான விடயமாகும்.



இடைக்காலத் தன்னாட்சி அதிகார அலகு தரமறுத்துக் காலத்தை இழுத்தடித்த சிங்கள அரசின் உண்மைத் தோற்றத்தை உலகம் உணர வைத்தது இந்தச் சுனாமிப் பேரழிவேயாகும். பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்குப் போதிய உதவிகள் செய்யாது அரசு இருந்ததையும், அந்தப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆற்றிய பணியும் உலகை வியக்க வைத்தன. வெளிநாட்டுப் பிரமுகர்களைத் தமிழ்ப் பகுதிகளுக்குச்செல்ல விடாது தடுத்தமை, அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் சிங்களப் பகுதிகளில் காட்டிய அக்கறை, சிங்கள அரசின் முகத்திரையைக் கிழித்து விட்டது. எனவே தான் உலக வங்கியின் மீதும், இதர அமைப்புக்கள் மீதும் கண்டனங்களைத் தொடுக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் சுனாமி அனர்த்த, யுத்தப் பாதிப்புப் பிரதேச அபிவிருத்திக்கு உலக வங்கி 600 கோடி ரூபா வழங்கப்போவதாக அறிவித்துள்ளமை, இவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. எனவே வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒருபுறம், ஜே.வி.பியும் அதன் தேசப்பற்றுள்ள சிங்கள இயக்கம் மறுபுறமும் உலக வங்கியின் கொழும்புக்கான வசதிவிடப் பிரதிநிதிமேல் ஏறிப் பாய்கின்றனர். சிங்கள அரசுகள் ஏற்றுக் கொண்ட நிலைப்பாட்டையே இலங்கை வங்கியின் வதிவிடப் பிரதிநிதி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யதார்த்த நிலையும் அது தான் அதாவது - இந்தத் தீவில் ஒரு பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை அவர் சுட்டிக்காட்டி விட்டாராம். இது இலங்கைத் தீவின் இறைமையைப் பாதிக்கும் கூற்றாகும் என்று கண்டிக்கின்றனர். ரணில்விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒப்பந்தம் உருவானதும், இந்த ஒப்பந்தம் இன்று வரை இந்த அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், உலக வங்கிப் பிரதிநிதி அவ்வாறு கூறியதை ஏன் இவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள். உலக வங்கி மாத்திரமல்ல, ஐரோப்பிய நாடுகள் பலவும், ஐரோப்பிய யூனியனும் புலிகளும், அரசும் பொதுக்கட்டமைப் பொன்றை உருவாக்க வேண்டும் என்று கூறுகின்றன. *(தொடரும்...)*

---

பகுதி 67

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

சங்கர்



கோட்டையிலிருந்து அலஸ் தோட்டம் வரையான கடற்கரைப் பிரதேசத்துக்கு தற்காலிகமாக இந்தவிதி பொருந்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு விலக்களித்திருப்பது நிச்சயமாக இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றத்துக்குத் துணை போவதற்குத் தான் என்பதை எவருமே மறுக்க முடியாது. இந்த அடிப்படையில்தான் 'கொரியா' என்றழைக்கப்படும் அந்தப் பிரதேசத்தில் வாழும்சிங்கள மக்களை மீளக்குடியேற்றுதல் என்ற பெயரில் அந்த அத்துமீறலைச் செய்ய முயன்றுள்ளனர். இனவாத ஜே.வி.பி அரசியல்வாதிகளும், அரசும், பாதுகாப்புப் படையினரும் ஒன்றாக இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழும் சிங்கள மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஜே.வி.பியின் இவ்வாறான இனவாத நடவடிக்கை மூலம் தங்களது இயல்பு வாழ்வு பாதிக்கப்படுகிறது என்னும் அச்சம் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. ஆனாலும் அரசின் உள் நோக்கம் - தமிழ் பேசும் மக்களின் செறிவை விட, சிங்கள மக்களின் செறிவு கூடுதலாக இந்த மாவட்டத்தில் இருக்கவேண்டும் என்பதாகும்.

அதனால்தான் திஸ்ஸமஹாறாம, கதிர்காமம் போன்ற இடங்களிலிருந்து சிங்கள மக்களை இரவோடிரவாகக் கொண்டு வந்து இந்தப் பணிகளை ஆரம்பித்தனர். இதற்கென 25 இற்கும் மேற்பட்ட லொறிகளில் பொருட்களும் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. இதற்கு அரசின் பாதுகாப்புப் படையினரும் பூரண ஒத்துழைப்பை நல்கினர்.

தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக - தமிழ் மக்கள் இதற்கெதிராகப் பெரியளவில் கிளர்ந்தெழுந்தனர். தங்கள் உயிரைக் கொடுத்தேனும் இதனைத் தடுத்தாக வேண்டும் என முடிவெடுத்தனர். தொடர்ந்து மக்கள் சகல வீதிகளையும் தடுத்து அரசுக்கெதிராக மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்தச் செய்தி சர்வதேச ஊடகங்கள் மூலம் பரவியது. இதனால் சர்வதேச ரீதியாக அரசின் வேடம் தெரியப்போகிறது என்ற நிலை உருவானது. இதனாற் தான் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்தது ஒத்துழைப்பு வழங்குவது போன்ற நாடகத்தை பாதுகாப்புப் படையினர் நடத்தினர். இந்தப் பொருட்களை அங்கிருந்து அகற்றினர். இனியும் கூட இவர்கள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. இந்தப் பிரதேசத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் யாவும் விளாங்குளத்தில் இறக்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பொருட்கள் மூலம் கப்பல்துறை- தம்பலகாமத்தை அண்டிய பிரதேசத்தில் திட்டமிட்ட குடியேற்றததை மேற்கொள்ள மறைமுக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே விளாங்குளத்தில் பெளதத விகாரை அமைப்பதற்கு அத்திவாரம் போட்டவுடனேயே நாம் மிகப் பெரியளவில் எதிர்ப்புத் தெரிவித்தோம். நாடாளுமன்றத்திலும் தமிழ் எம்.பிக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இவை எல்லாவற்றையும் அரசு கணக்கில் எடுக்கவில்லை. அந்தப் பெளத்த விகாரை அமைககப்பட்டுவிட்டது. இதைப் போலவே கந்தளாயிலிருந்து திரியாய் வரையிலான பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும கபடமான திட்டத்தில், ஜே.வி.பி இறங்கியுள்ளதை நாம் உணர்கிறோம்.

புல்மோட்டையில் கூட அண்மையில் மையவாடியை தோண்டிய பிரச்சினை எழுந்துள்ளது. உண்மையில் இது ஒரு குடியேற்ற முயற்சியின் ஆரம்பக் கட்டமே. தமிழ்மக்களுக்கெதிராக செயற்பட்டு வந்த அரசின் நடவடிக்கைகள் இன்று தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானதாக விஸ்தரிக்கப் பட்டுள்ளன. மையவாடிப் பிரச்சினையில் பல ஊடகங்கள் இநத உண்மையை உணரவில்லை.

இது அரசுக்கு ஆபத்தானதாகவே முடியும். ஏனெனில், தமிழ் பேசும் மக்களின் ஒரு அங்கமாகிய முஸ்லிம் மக்களும் எமது போராட்டத்தின் உண்மை நிலையை உணர்ந்துள்ளனர். தமிழ்பேசும் மக்களாகிய நாம் ஒன்றுபட்டு இருப்பதன் மூலமே, எங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். கடந்த காலத்தில் பேரினவாத நோக்குடன் எம்இரு இனத்தவரையும் பிரித்துக் கையாண்டார்கள் என்ற உண்மையைப் புரிந்துள்ளனர். இதனால் தமிழ் பேசும் மககளாகிய நாம் திருமலை மாவட்டத்தில் அரசுக்கெதிராக ஒன்றாக இணைந்துள்ளோம். எதிர்காலத்தில் இவ்வாறான குடியேற்ற நடவடிக்கைகளை அரசு தொடருமாக இருநதால், நிச்சயமாக சமாதானத்துக்கான கததவை இழுத்து மூடுவதாகவே அமையும். அவ்வாறான நிலைக்கான பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறாக விக்னேஸ்வரன் கூறியதும் - அவரிடம் நான் ஒரு வினா தொடுத்தேன். '1976. இல் தந்தை செல்வாவின் அஸ்தியை ஊர்வலமாகக் கொண்டு செல்கையில் - சிறிமாபுரத்தில் வைத்து சிங்களக் குடியேற்ற வாசிகள் தாக்கினார்கள். இன்று அவர்களின் பிள்ளைகளும் இளைஞர்களாக உள்ளனர். அவ்வாறிருக்கையில், நீங்கள் இந்தக் குடியேற்ற முயற்சியைத் தடுக்கும் போது அவர்கள் மெளனமாக இருந்துள்ளார்கள். அதாவது - சாம்பலை ஊர்வலமாகக் கொண்டு செல்வதையே பொறுக்காதவர்கள் இன்று வீதிமறியல், ஆர்ப்பாட்டம் என்று தமிழர்கள் கூடுவதை எப்படிப் பொறுத்தார்கள்'?

அதற்கு அவர் 'அவர்கள் ஒரு திடமான முடிவுக்கு வந்துவிட்டார்கள். திருமலை தமிழ்மக்களின் பிரதேசம் என்றோ, ஒருநாள் இது அவர்களின் ஆட்சிக்கு உட்படப் போகிறது என்ற நம்பிக்கை சிங்களவரின் மத்தியில் பலமாகியுள்ளது. மேலும் தமிழ் மக்கள் வேறு, புலிகள் வேறல்ல இரண்டுமே ஒன்றுதான் என்ற உண்மையையும் புரிந்துள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் அழிவுகளுக்கு நிவாரணம் செய்ய வேண்டும். அதற்குப் புலிகளின் கருத்துக்கள், செயன்முறைகள், பங்களிப்புத் தேவை என்ன மதிப்பீடு அவர்களிடம் ஏற்பட்டுள்ளது.

*(தொடரும்...)*

---

# தவக்காலச் சிந்தனை


**"உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்"**

**[யோவா . 13:21]**

மோ.தார்சீசியஸ்

இன்று நாம் யூதாசின் சதி குறித்தும் , இயேசு தம் சீடர்களுக்கு கொடுத்த அன்பின் வழிகாட்டலைக் குறித்தும் நாம் காண்கிறோம். இரவுணவிற்கு முன் உள்ளத் தாழ்ச்சியை வலியுறுத்தத் தம் சீடர்களின் பாதங்களைக் கழுவிப் பணிந்ததையும் படிக்கிறோம்.

அந்தவேளை உங்களில்ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் எனவும் , மனங்கலங்கி கூறினார். காட்டிக் கொடுப்பவன் யார்? எனக் கேட்ட போது, அப்பத் துண்டைத் தோய்த்து யூதாசிற்கும் கொடுத்து, அதன் மூலம் கேள்விக்குரிய பதிலை அளித்தார்.



அவன் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என இயேசு முன்னரே அறிந்திருந்தாலும், இறை சித்தம் தமது வாழ்வில் நிறைவேறவே அவர் அதைஏற்றுக் கொண்டார். தாம் தந்தையிடம் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது என்று அறிந்து , தந்தை தன் னில் மகிமை பெறவேண்டும் என்பதற்காக இணைந்தார். இன்றைய உலகிலும் நாம் இயேசு வைக் காட்டிக் கொடுத்துக் கொண்டே வாழ்கிறோம். காட்டிக் கொடுக்கும் செயல்களும் வளர்ந்து கொண்டே , வாழ்ந்து கொண்டே இருக்கிறது.

இயேசு தம் தந்தையிடம் வைத்திருந்த நம்பிக்கை நம்மிடமும் இருக்க வேண்டும். நாம் போதிய வலிமையும், அருளும் பெற எப்போதும் அவர் மீது நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.

# ஈராக்கிய உள்துறை அமைச்சர் கிளர்ச்சிவாதிகளால் கடத்தல்!



ஈராக்கின் உள்துறை அமைச்சர் வீல் அப்துல்லா தீப் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்டாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

உள்துறை அமைச்சர் அப்துல்லா தீப் பஸ்ரா நகருக்குச் சென்றுவிட்டு, அங்கிருந்து தலைநகர் பாக்தாத்திற்கு காரில் தனது பாதுகாவலர்களுடன் திரும்பிக் கொண்டிருந்தார். இதன்போது இவர்களை கிளர்ச்சிவாதிகள் இடைமறித்து, துப்பாக்கி முனையில் அமைச்சரைக் கடத்திச் சென்றுவிட்டனர். அத்துடன், அமைச்சருடன் சென்ற பத்துப் பாதுகாவலர்களும் கிளர்ச்சிவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டனர்.

உள்துறை அமைச்சர் கடத்தப்பட்ட சம்பவம், ஈராக்கிய இடைக்கால அரசுக்கு உடனடியாகத் தெரியவரவில்லை. அமைச்சரைத் திடீரெனக் காணவில்லையென உள்துறை அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில், அமைச்சர் கடத்தப்பட்ட விடயம் தாமதித்தே அரசுக்குத் தெரியவந்தது. இதனையடுத்துக் கடத்தப்பட்ட அமைச்சரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கப் படையினரும், ஈராக்கியப் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, அமைச்சருடன் கடத்தப்பட்ட பத்து பாதுகாவலர்களது நிலை குறித்து எதுவும் தெரியவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில், கிளர்ச்சிவாதிகளுக்கும் தமக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 24 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதுடன், ஏழு பேர் காயமடைந்ததாகவும், தமது தரப்பிலும் ஆறு படை யினர் காயமடைந்ததாகவும் அமெ ரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம், மொசூல் பகுதியில் கிளர்ச்சிவாதிகளுக்கெதிரான நடவடிக்கைப் பிரிவின் தலைமைப் பொலிஸ் அதிகாரி, தற்கொலைக் குண்டுத் தாரியினால் கொல்லப்பட் டார். இதன்பின்னர் இவரது மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் மீது கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்களுக்கு அல்கொய்டா உரிமை கோரியுள்ளது.

பகுபா நகரிலும் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலில் 13 பொதுமக்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மொசூல் பகுதியில் கடந்த சனிக்கிழமை, பொலிஸ் அதிகாரியொருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் அவரது மரணச் சடங்கிற்குச் சென்ற பொலிஸாரின் வாகனம் கண்ணி வெடியில் சிக்கியதில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் பாரிய வெள்ளப்பெருக்கு 200 இற்கும் மேற்பட்டோர் பலி!



ஆப்கானில் பெய்துவரும் பருவப் பெயர்ச்சி மழையால் ஏற்பட்டுள்ள பாரிய வெள்ளப் பெருக்கு மற்றும் உறைபனி உருகியமை போன்றவற்றால் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானின் மத்திய மாகாணமான உருஷ்கானில் இடம்பெற்ற இந்த இயற்கை அனர்த்தத்தால் பொதுமக்களின் பெருமளவு வீடுகள் அழிவுக்குள்ளானதுடன், பலர் காணாமற் போயுள்ளனர். அத்துடன் வெள்ளம் வயல் நிலங்களூடாகச் சென்றதால் செய்கை பண்ணப்பட்ட பெருமளவு பயிர்கள் நாசமாகின.

இந்த அனர்த்தத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் அமெரிக்க ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதுவரை 250 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களுக்கான உதவிகளை ஐ.நாவின் உலக உணவு ஸ்தாபனம் அனுப்பி வைத்துள்ளது.

இந்த இயற்கை அனர்த்தம் மத்திய மாகாணத்தின் கோர், மேற்கு மாகாணத்தின் பாரா மற்றும் ஹேரத், வடமாகாணத்தின் பாயாப் ஆகிய பகுதிகளையும் மோசமாகப் பாதித்துள்ளது.

ஆப்கானில் உறைந்துள்ள பனிப்பொழிவுகள் உருகத் தொடங்கி மிடத்து, ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் பாரிய அழிவுகளை ஆப்கான் மக்கள் சந்திக்க வேண்டி வரலாமென உலக உணவு ஸ்தாபனம் கடந்த மாதம் எச்சரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# ஜப்பானில் பூகம்பம்; 500 பேருக்கு மேல் காயம்!



ஜப்பானின் தெற்குப் பகுதியில் புகோகோ கடற்கரையை ஒட்டியுள்ள கியூசு நகரில் நேற்று முன்தினம் பூகம்பம் ஏற்பட்டது. 7.0 ரிக்டர் அளவில் பதிவான இந்தப் பூகம்பத்தால் 700 க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரை மட்டமாகின. பூகம்ப இடிபாடுகளில் சிக்கி 500 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

பூகம்பம் பாதித்த கியூசு நகரம் சுடுகாடு போல காட்சி அளிக்கிறது. வீடுகளை இழந்து தவிப்பவர்களுக்காக அமைக்கப்பட்ட சிறப்பு முகாம்களில் தற்போது 3000 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பூகம்பத்தைத் தொடர்ந்து சுனாமி அலைகள் தாக்கக்கூடும் என்று புவியியல் துறை எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதனால் முகாம்களில் உள்ளவர்கள் காலைவரை தூங்காமல் கண்விழித்தபடியே இரவுப் பொழுதைக் கழித்தனர்.

ஆனால், சுனாமி அலைகள் எதுவும் தாக்கவில்லை. கடலில் கொந்தளிப்பு மட்டும் இருந்தது. இதையடுத்து சுனாமி எச்சரிக்கை அறிவிப்பை புவியியல் துறை விலக்கிக் கொண்டது.

பூகம்பத்தைத் தொடர்ந்து 6 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டன. தொடர் நிலநடுக்கம் 4.2 ரிக்டர் அளவாகப் பதிவானது.

இந்தப் பூகம்பத்தின்போது கட்டடம் இடிந்து விழுந்ததில் 75 வயது பெண் ஒருவர் பலியானார்.


## கண்ணீர் அஞ்சலி...



பிறப்பு 1978 03 16

இறப்பு 2005 03 20

**சித்திரமூர்த்தி கலைவாணி**

[கணக்காய்வாளர் - நிதிப்பிரிவு, அரசியற்துறை]

காலையில் வந்தவுடன் உம் சேதி கேட்டோம்
நம் மனம் மறுக்கிறது
உண்மையானதும் திகைத்தோம்!

கடமைதனை தன் சிரம்மேல்
கொள்ளும் பண்புடையவள்
காலத்தின் தேவையறிந்து – உம்
சேவை தொடர்ந்தீர்!
மேன்மைமிகு சேவையால்
வெகு விரைவில் எல்லோரையும்
கவர்ந்தீர்!

மாலையிடும் நாளில் நாம் வந்து வாழ்த்த
பல்லாண்டு காலம் வாழும் வாழ்வென நினைத்தோம்
சேதி 'இது' வென அறிந்து நெஞ்சு விக்கித்து மீண்டோம்
வாழ்வுப் பயணத்தை நீர் முடித்தபோதும்
நீர் விட்ட கடமையில் உமை நினைப்போம்....!

போராளிகள், பணியாளர்கள்
நிதிப்பிரிவு அரசியற்துறை

(சி-3922)



**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், ரவிகிருஷ்ணா, நதிஷா, ரம்பா நடித்த
**சுக்ரன்**
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

**மனோகரா** திரையரங்கு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
மாறுபட்ட வேடங்களில் சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த
**மாயாவி**
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

**நிறைஞ்சனாஸ்**
இன்று முதல்
கமல் (இருவேடம்) மனீஷா கொய்ராலா நடித்த
**ஆளவந்தான்**
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
குளிரூட்டப்பட்டது
**THE PASSION OF THE CHRIST**
(இயேசுநாதரின் இறுதி 12 மணி நேரக் கதை)
கா.நே(பு.நே) ▷ 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3857)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
**லண்டன்**
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-3859)
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்




# வேலைவாய்ப்புச் செய்திகள்

## பேராசிரியர், கணினி விஞ்ஞான உதவியாளர்

தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் வெற்றிடங்களுக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கில சிரேஷ்ட பேராசிரியர் தரம் I, II, மனோதத்துவ சிரேஷ்ட பேராசிரியர் தரம் I, II, கணினி விஞ்ஞான உதவியாளர் பதவி தரம் I, II, தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் I (B) பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை 2005.04.20 ஆம் திகதிவரை - சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எஸ்டெப்ளிஷ்மென்ட் இடமிருந்து நேரடியாக, அல்லது தபாலில் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ரூபா 50 செலுத்திப் பெற்றுக்கொள்ள லாம். விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் - இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக காசாளரின் பெயருக்கு வரையப்பட்ட காசுக் கட்டளையை ஒலுவில் தபால் அலுவலகத்திற்குச் செலுத்தும்படி அனுப்பிவைக்கவும். அத்துடன் சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறை ஒன்றையும் அனுப்பவும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை 2005.04.25 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு -

'எஸ்டெப்ளிஷ்மென்ட் சிரேஷ்ட உதவியாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் 32360' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

## அபிவிருத்தி உதவியாளர்

நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சு அபிவிருத்தி உதவியாளர் பதவிக்குப் பின்வரும் தகைமைகள் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவம், வர்த்தகம், பொருளியல், சமூகவியல், புவியியல் சர்வதேச தொடர்புகள், இரசாயனம், பௌதீகவியல், கணிதம் அல்லது கமத்தொழில் பற்றிய விசேட பட்டமொன்றை அல்லது மேற்கூறிய பாடங்களில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களுடன் சாதாரண பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 2005 ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவ தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் -

'செயலாளர், நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சு, இல 177 காலி வீதி, கொழும்பு - 03' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நேர்முகத் தெரிவின் மூலம் நியமனமாவோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பணிக்கமர்த்தப்படுவர்.

## பரிசோதனை உதவியாளர்

இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் பரிசோதனை உதவியாளர் பதவிக்கு கீழ்க்காணும் தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன் வயதெல்லை 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

தற்போது அரச சேவை, கூட்டுத் தாபனம், நியதிச் சபை மற்றும் அரச நிறுவனங்களில் பயிற்சியில் இருக்கும் பட்டதாரிகள் தமது திணைக்கள, நிறுவன தலைவர்களினூடாக விண்ணப்பப் படிவத்தை 2005.04.05 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக் கூடியவாறு -

'தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கை மினரல் சேண்ட்ஸ் லிமிட்டட், இல 356 யூனியன் பிளேஸ், கொழும்பு - 02' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விபத்தில் படுகாயமுற்ற கர்ப்பிணிப் பெண் மரணம்

இணுவில் லக்ஷ்மி தியேட்டருக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண் நேற்றிரவு உயிரிழந்தார்.

இணுவிலைச் சேர்ந்த மனோகரன் றஜினி (வயது 27) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

கடந்த வியாழன் இரவு 8.00 மணியளவில் இணுவில் பகுதியிலுள்ள கடையொன்றில் பொருட்களை வாங்கிக்கொண்டு கணவனும் மனைவியும் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் மோதியதில் இருவரும் படுகாயமடைந்தனர்.

எனினும், இவரது கணவன் தற்போது குணமடைந்து வருவதாக யாழ். போதனாவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# நிவாரணம் வழங்கக் கோரி வேலணையில் ஆர்ப்பாட்டம்!

வேலணை பிரதேச மக்கள் - கடந்த சில மாதங்களாக தமக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாமல் இருப்பதைக் கண்டித்து, வேலணை பிரதேச செயலகத்தின் முன் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 8 மணியளவில் பிரதேச செயலகத்தின்முன் ஒன்றுகூடிய மக்கள் - 'எமக்கு நிவாரணத்தை வழங்கு', 'எமது நிவாரணத்தை வெட்டாதே' போன்ற பதாகைகளை ஏந்தியவாறு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் காலை 9.30 மணிவரை இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து வேலணைப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தரிடம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கான மகஜர் ஒன்றையும் இவர்கள் கையளித்தனர். இந்த மறியல் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் பங்குபற்றினர். மேற்படி மகஜரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் அனுப்பி, அவரின் பதிலைப் பெற்றுத் தருவதாக நிர்வாக உத்தியோகத்தர் உறுதியளித்ததை அடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

## கருணாவின் சகாக்கள்...

கருணாவின் சகாக்கள் தங்கியிருந்த தீவுச்சேனை முகாம்மீது இனந்தெரியாத குழுவினர் தாக்குதல் நடத்தியபோதே இந்த மோதல் வெடித்ததாக ஒரு செய்தி தெரிவித்தது.

எனினும், மகாவலி ஆற்றைக் கடந்துசென்ற விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் ஐந்து அல்லது ஆறுபேர் கொண்ட குழுவினர், தீவுச்சேனைப் பகுதியில் - கருணாவின் சகாக்கள் மீது பதுங்கித் தாக்குதல் நடத்த முற்பட்டபோதே இந்த மோதல் வெடித்ததாக இன்னொரு செய்தி கூறுகிறது. இந்தத் தாக்குதலின் பின்னர் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் மற்றும் பொலிஸாரால் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

சேனாபுர பகுதியில் இரண்டு வெவ்வேறு இடங்களிலிருந்து - சூட்டுக் காயங்களுடன் இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் - கருணாவின் சகாக்கள்மீது தாக்குதல் நடத்த வந்தவர்களின் சடலங்களாக இவை இருக்கலாம் என்றும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. இந்தச் சம்பவத்தில் காயமடைந்து பொலனறுவ வைத்தியசாலையில் - ஐயாத்துரை சதீஸ், சின்னமுத்து ரவீந்திர ராஜா, கந்தசாமி தேவராஜ் ஆகியோர் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்களில் மங்களம் மாஸ்டர் சிறுகாயமே அடைந்ததாக இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டபோதும்- வைத்தியசாலை வட்டாரங்கள் இவர் மோசமாகக் காயமடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் கரபொல கிராமத்தில் வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த அப்புஹாமி ரண்பண்டா ஹேமலதா என்ற 5 வயதுச் சிறுமியும் காயமுற்று பொலனறுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து - வெலிக்கந்தப் பகுதியில் பெருமளவான படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. இங்கு சோதனை நடவடிக்கைகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்த இராணுவ வட்டாரங்கள் - காயமுற்றவர்களுக்கு பொலனறுவ வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுவதாலும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருப்பதாலும் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தன.

இதனிடையே - இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர். தீவுச்சேனையில் கருணாவின் சகாக்கள் முகாமிட்டிருப்பது தொடர்பான தகவல்களை, சண்டே லீடர் பத்திரிகை புகைப்பட ஆதாரங்களுடன் நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தது.

ஆனால், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அப்படி எந்தவொரு முகாமும் இல்லையென்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க மறுத்திருக்கிறார்.

அதே பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் குறித்து நேற்று கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க - தாக்குதல் நடந்தபகுதி படையினரதும் புலிகளினதும் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கிடையில் இருப்பதாகத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## முரளிதரனின்...

யாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இவர்களுடன் மு.க.ஸ்ராலின், கருணாநிதியின் இரண்டு மனைவியர், ஆர்.எம்.வீரப்பன் மற்றும் தொழிலதிபர்கள் எனப் பலர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 98.88 | 99.83 |
| ஸ்ரேலிங் பவுண் | 188.86 | 191.62 |
| யூரோ | 130.68 | 132.93 |
| சுவிஸ் பிராங் | 84.06 | 86.09 |
| யென் | 0.9380 | 0.9563 |

# ரகுபதி குடியிருப்புத் திட்டம் புளியங்குளத்தில் திறந்துவைப்பு

போர்ச்சூழல் காரணமாகவும், சமூக பொருளாதார ரீதியாக இருப்பிட வசதிகளற்ற நிலையில் வாழ்ந்துவந்த மக்களுக்கான குடியிருப்பொன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் புளியங்குளம் புதூர் பகுதியில் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வாழ்ந்துவரும் ராஜரட்ணம் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்புடன் இக்குடியிருப்பு நிறுவப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்புத் திறப்பு விழாவானது நேற்றுக் காலை 9.45 மணியளவில் புளியங்குளம் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திலீப் தலைமையில் இடம்பெற்றது.

பொதுச் சுடரேற்றல், ஈகச் சுடரேற்றலுடன் திறப்புவிழா நிகழ்வு ஆரம்பமாகியதையடுத்து தேசியக் கொடியினை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து அகவணக்கத்துடன் ஏனைய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

ரகுபதி குடியிருப்புத்திட்டம் எனப் பெயர் சூட்டப்பட்ட குடியிருப்பின் பெயர்ப்பலகையினை தமிழர் புனர்வாழ்வுக் கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் நீகன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், தமிழர் புனர்வாழ்வுக்கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் நீகன் ஆகியோர் சிறப்புரைகளையாற்றியிருந்தனர். தொடர்ந்து பயனாளிகளிடம் வைபவரீதியாக வீடுகள் கையளிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான கேணல் ஜெயம் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் - வீடுகளுக்கான திறப்புக்களை பயனாளிகளிடம் வழங்கி வீடுகளையும் கையளித்தனர்.

இதற்கிடையில், ஒரு குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளடங்கிய பொருட்களைப் பொறுத்து ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சமையல் உபகரணங்கள், உலர் உணவுப் பொருட்கள், படுக்கை விரிப்புக்கள், நுளம்பு வலைகள் மற்றும் ஏனைய பயனளிக்கத்தக்க பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது.

இதேபோன்று ஒவ்வொரு வீட்டிலும் பயனுள்ள மரக்கன்றுகளை நாட்ட ஊக்குவிக்கவேண்டுமென்ற நோக்கோடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் தென்னங்கன்றுகள், பலாக்கன்றுகள், தேசிக்கன்றுகள் போன்ற பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

# துப்பாக்கியுடன் இருவர் கைது!

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த பகுதியில் துப்பாக்கியுடன் சென்ற இரு சிங்கள இளைஞர்களைப் படையினர் கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் வெலிக்கந்தபோட்டா பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். அசிரிகம என்ற இடத்தைச் சேர்ந்த சமன்குமார, நிசாந்த என்ற இருவருமேஅடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் படைத்தரப்பு தெரிவித்தது.

## அரகம்வில...

இந்தச் சம்பவம் தொடர்பாக ஐந்து பேரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்திருப்பதாகவும் இவர்கள் கண்டியைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் சாரதியைக் கொலை செய்து வாகனங்களைக் கடத்தும் ஆயுதக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

## ஐரோப்பா...

போதே உண்மை தெரியவந்துள்ளது.

கமரூனில் இருந்து வேறு கடவுச்சீட்டுமூலம் ஐரோப்பா செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் அதற்கான கடவுச்சீட்டுக்கள் கமரூனில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் என்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவிற்குச் செல்ல இவர்கள் பல இலட்ச ரூபாவை முகவரிடம் கொடுத்திருப்பதும் விசாரணைகளில் தெரியவந்தது.

# குளத்தில் மூழ்கி சிறுவன் மரணம்!

குளத்திற்கு குளிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமடைந்த சம்பவம் ஒன்று நேற்று வேலணைப் பகுதியில் இடம்பெற்றது.

வேலணை கிழக்கைச் சேர்ந்த தவச்செல்வம் வஜிதரன் (வயது 7) என்ற சிறுவனே நீரில் மூழ்கி மரணமடைந்தவர் ஆவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி சிறுவன் உறவினர்களுடன் தமது வீட்டுக்கு அண்மையாகவுள்ள குளம் ஒன்றில் நீராடச் சென்றபோதே நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமடைந்தார். மரணமடைந்த சிறுவனின் உடல் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

CATWAS.COM
Computer Academy

Diploma Courses
* MS-Office 1750/-
* DTP 2000/-
* Hardware 1500/-
* Webpage 3000/-
* Video Mixing 2500/-

புதிய பிரிவுகள்
பிரிவு I 26.03.2005
பிரிவு II 05.04.2005
ஆரம்பம்

Certificate Courses
Microsoft Kids Program
(C/3919)

VACANCY
Multimedia and Hardware Technology
கற்பிக்கத் தகைமையுள்ளவர்கள் 24.03.2005க்கு முன்னர் தங்கள் சுயவிபரக் கோவையினை தபால் மூலமாக விண்ணப்பிக்கவும். இத்துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

No: 26, Somasundram Avenue, Chundikuli, Jaffna. T.P: 0212223805

# குழந்தையின் சடலத்தை கைவிட்டுச் சென்ற பெண்

## யாழ்.போதனா வைத்தியசாலையில் சம்பவம்

ஊர்காவற்றுறை பகுதியிலிருந்து வந்த பெண்ணொருவர், தனது ஒரு நாள் குழந்தையை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்து, அது இறந்தவுடன் சடலத்தை வைத்தியசாலையில் கைவிட்டு விட்டு வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, மேற்படி பெண் வசித்துவந்த ஊர்காவற்றுறை - கரம்பன் பகுதிக்குச் சென்ற பொலிஸார், மேற்படி பெண்ணிடம் விசாரணை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்தப் பெண் தனது கணவருடன் வைத்தியசாலைக்கு வந்து தனது குழந்தையின் சடலத்தை வைத்திய பரிசோதனையின் பின்னர் எடுத்துச் சென்றுள்ளார்.

## இலங்கை இராணுவ...

ஹெயிட்டியில் முன்னாள் படையினர் பொலிஸ் நிலையமொன்றில் பலவந்தமாக முகாமிட்டிருந்ததாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றும் நோக்குடன் ஐ.நா. அமைதிப் படையினர் மற்றும் ஹெயிட்டி பொலிஸார் சென்றவேளை ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இந்த உயிரிழப்புச் சம்பவம் இடம்பெற்றதாக அந்தப்பிராந்தியத்தின் பொலிஸ் அதிகாரி நீனன் எற்றினி தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஐ.நாவின் அமைதிப் படையில் இணைந்திருந்த இலங்கைப் படையினரில் ஒருவரும் மற்றும் முன்னாள் படைவீரர்கள் இருவரும் உயிரிழந்ததாக அவர் தெரிவித்தார்.

இலங்கைப் படைவீரர் ஹெயிட்டியில் உயிரிழந்தமையை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்கவும் உறுதிப்படுத்தியுள்ளார். உயிரிழந்த படைவீரரின் சடலம் விரைவில் இலங்கைக்கு எடுத்துவரப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். உயிரிழந்தவர் லான்ஸ் கோப்ரல் எச்.எம்.விஜயசிங்க (வயது 27 பதுளை) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும், இந்தச் சம்பவத்தில் சார்ஜன்ட் விஜேதிலக, கோப்ரல் பிறேமசிறி, லான்கோப்ரல் ஜெனக உதயகுமார ஆகியோரும் காயமுற்று சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

ஹெயிட்டியில் ஐ.நாஅமைதிப் படையணியில்இணைந்து 700 இலங்கைப் படையினர் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்



## சித்திரமூர்த்தி கலைவாணி

### (கணக்காய்வாளர், நிதிப்பிரிவு அரசியற்துறை)

சித்திரமூர்த்தி - கலைவாணி (கணக்காய்வாளர் நிதிப்பிரிவு அரசியற்துறை) என்பவர் 2005.03.20 அன்று அகாலச் சாவடைந்துள்ளார்.

இவர் சின்னையா சித்திரமூர்த்தி (சைனீஸ்) அன்பு மனைவியும் ஈஸ்வரன் இந்திராணி தம்பதிகளின் அன்பு மகளும் சின்னையா செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2005.03.22 காலை 9 மணியளவில் 233, ஜெயந்திநகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்பட்டு திருநகர் இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

தகவல்:-
கணவர் - சித்திரமூர்த்தி (சைனீஸ்)

(சி-3923)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.